தென்றல்

ஆசிரியர் — கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 25-1-58 | சனிக்கிழமை | இதழ் 28

★

தமிழகத்து வரலாற்றில் புதையுண்டு கிடக்கும் அருமையான சம்பவங்களில் வேள்நாட்டுப் பேரழகி வல்லபியின் வாழ்க்கை சுவை மிகுந்தது.

வல்லபி அழகி-இசைப் பயிற்சிபெற்றவள். ஆடற்கலையில் தேர்ந்தவள். இளவரசர், படைத் தலைவர், புரட்சிக்காரர்கள், எல்லோருமே அவளை விரும்பினார்கள். ஆனால் அவள் யாரை விரும்பினாள்? அது கைகூடிற்றா? இதுதான் கதையின் கருப்பொருள். பல எழுத்தாளர்கள் வல்லபியின் வாழ்க்கையைப் பின்னி சிறுகதைகளாகவும், நாவல்களாகவும் தீட்டியிருக்கிறார்கள். இந்த இதழில் பத்தாம் பக்கத்தில் வல்லபியைப் பற்றிய ஒரு சிறுகதை இடம் பெற்றிருக்கிறது. ஆசிரியர் வல்லபியை வேறொரு கோணத்திலிருந்து பார்க்கிறார். படியுங்கள்.

★

அப்துல்லாவின் லட்சியம்!

“தனக்குச் சொந்தமில்லாத ஏதாவதொரு நிலப்பகுதியை நமக்குக் கொடுக்க முன்வந்த ஆங்கிலேயன், ஸ்விட்சர்லாந்து நாட்டைக் கொடுத்துத் தொலைத்திருக்கலாமே?” என்று டெல் அவீவ் நகரக்குடிமகன் ஒருவன் குறிப்பிட்டுக் குறைபட்டுக் கொண்டதாக, இஸ்ரேல் நாட்டு ‘ஷார்ட்வேவ் ரேடியோ’வின் விகடத் துணுக்கு ஒன்று உலகத்தில் உலவுகிறது.

வறட்சியும் வறுமையும் கொண்ட இஸ்ரேல் நாட்டுக்குப் பதில், ஸ்விட்சர்லாந்து நாடு கிடைத்திருக்கக்கூடாதா என்று இஸ்ரேலியர்கள் அங்கலாய்க்கிருர்கள் என்ருல், ‘ஆசியாவின் ஸ்விட்சர்லாந்து’ நாடான காஷ்மீர், நமது ‘தலைமேல்’ ஏன் வந்து வாய்த்ததோ என்று சராசரி இந்தியக் குடிமகன் நினைக்கும் அளவுக்கு அங்கு விவகாரங்கள் பெருகி வருகின்றன!

காஷ்மீரத்திலே இந்தியாவுக்கிருக்கும் உரிமைகளைக் காட்டிலும், அந்த உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள ‘இந்தியாவின் பிரஜை’ கொடுக்கும் ‘விலை’யின் பரிணாமம்தான் சாகசமாகத் தெரிகிறதே தவிர, பலனைக் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது கிடைக்கும் விடை கேலிக்குரியதாகவே இருக்கிறது.

ஒருவர்-காஷ்மீர மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தவர், காஷ்மீர்ச் சிங்கம்-ஷேக் அப்துல்லா திடீரென ஓர் நாளில் திகைக்க வைக்கும் வெடிகுண்டு ஒன்றை வீசினர்!

அந்த வெடிகுண்டு வெடித்திருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் நிலை எவ்வளவு இக்கட்டில் முடிந்திருக்கும் என்பதைப்பற்றி இப்போது ஆராய்ச்சி தேவையில்லை. ஏனென்ருல் அது வெடித்துச் சிதறுவதற்குமுன்பே அதை வீசிய, ஷேக்காயியின் கையைக்கட்டி-வாயைப் பொத்தி சிறையிலடைத்துவிட்டார்கள்.

1952-ஆம் ஆண்டிலே ஆரம்பித்த அப்துல்லா-நேரு கெடுபிடிப் போர், 1953 ஆகஸ்டிலே ஒருவாறு முடிவுக்கு வந்தது.

அப்துல்லா பாதுகாப்புக் கைதியாக ஜம்முவின் வடகோடிப் பகுதியிலே கூட் என்ற இடத்தில் சிறை வைக்கப்பட்டார்.

அதற்குப் பிறகு அப்துல்லா தர்பாரில், துணைப் பிரதமர் பதவி வகித்த பக்ஷிகுலாம் முகமத், பிரதமர் பதவி ஏற்ருர்.

அப்துல்லா சிறை வைக்கப் பட்டதற்குப் போதிய காரணம் என்னவென்று திட்டவட்டமாக நமக்குச் சொல்லப்படவில்லை. அவர் அமெரிக்கரின் கைக்கூலியாகிவிட்டார் என்றனர் சிலர்;

இதனை இந்திய அரசாங்கம் மன்னித்தது; எதற்காகச் சிறைலடைக்கப்பட்டோம் என்பது சம்பந்தப்பட்ட கைதிக்கே, தெரியாத அளவில், கேள்வி - முறை இல்லாமல் நாலரை ஆண்டுகளுக்குமேல் சிறையில் வைத்திருந்தது.

நாலரைஆண்டு சிறைவாசத்திற்குப் பிறகு இந்தத் திங்கள் 9-ம் நாளன்று ஷேக் அப்துல்லா வெளி விடப்பட்டார்.

அவரைக் கைது செய்து சிறை வைத்து எவ்வளவு குழப்பத்தை உண்டாக்கிற்ருே அதைவிட அதிகக் குழப்பம் உண்டாக்குவதாகவே, அவருடைய விடுதலை நடவடிக்கையும் இருக்கிறது.

ஏன் கைது செய்யப்பட்டார் என்பது எப்படி நமக்கு இதுவரையில் சரியாகச் சொல்லப்படவில்லையோ, அதைபோல ஏன் விடுதலை செய்யப்பட்டார் என்பதும் விளங்கவில்லை.

அடி-குத்து - கொலை - வெட்டு என்று நிலைமை கட்டுக்கடங்காமல் இருந்தபோது அவர் சிறையில் வைக்கப்பட்டதுபோலவும், அவரை சிறையில் வைத்துப் பூட்டியவுடன் அந்த அமளி நின்றுவிட்டதுபோலவும், நாலாயிர ஆண்டுகளில் காஷ்மீரம் சகஜ நிலைக்குத் திருப்பிவிட்டகளில் காஷ்மீரம் எவ்வளவோ முன்னேறிவிட்டிருக்கிறதாம். அதேபோல எதிர்காலத்திலும் முன்னேற்றமடைய இந்தியா தனது நட்புதவியைக் கொடுக்குமாம்!-பத்திரிகைகள் இப்படி எழுதுகின்றன.

‘காஷ்மீர் எவ்வளவோ முன்னேறியிருக்கிறது’ என்று சொல்லும் அளவில்தான், பிரச்னையின் உருவம் தெரிகிறதேதவிர, இத்தனைச் செலவிட்டும் காஷ்மீர் மக்களின் உள்ளத்தில் ஏற்பட்டிருக்கும் மாறுதலின் அளவு என்ன?

இங்கு வயிற்றை இறுகப் பிடித்து வரிகட்டி, காஷ்மீரப் பள்ளத்தாக்கில் கோடி கோடியாகக் கொட்டியழுத பணத்திற்கு ஏற்பட்ட மதிப்பு என்ன?

தென்னக மக்களின் அரை வயிற்றுத் தீனியைக்கூடக் கல்லி எடுத்துப் போய், அங்கு ஜல்லி போட்டு, ‘மேடு’ ஆக்க நினைத்த மகானுபாவர்கள், இதற்கு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிருர்கள்.

காஷ்மீரத்திலே நல்ல பாதைகளும் நானுவிதத் தோட்டங்களையும் நிர்மாணித்து ‘முன்னேறி’ வைத்திருக்கலாம்; ஆனல் காஷ்மீர் இந்தியாவுக்குத்தான் சொந்தம் என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளும் அளவில், அங்கு அடைந்த முன்னேற்றம் என்ன?

புகழ்ந்த நேரு புலம்புகிருர்

இந்தியத் துணைக்கண்டம் இரு அரசுகளாகப் பிரிக்கப்பட்டு, இன்றைக்குப் பதினேரு ஆண்டுகள் ஆகியும், காஷ்மீர் பற்றிய பிரச்னையில் தெளிவான விடை காணுமல் குழம்பிக்கிடப்பதற்குக் காரணம், காஷ்மீர் இயற்கை வளப்பத்தின்மேல் பழியைப் போடுவதா? இந்தியாவுக்கிருக்கும் இராஜதந்திரக் குறைவை எண்ணிப் பார்ப்பதா? காஷ்மீரம் இந்தியாவுக்குத்தான் சொந்தம் எனறு ‘நா ட்’ சொல்கிருேம்’

எங்களுக்குத்தான் சொந்தம் என்று பாகிஸ்தானியர் சொல்கிருர்கள்.

‘கொஞ்சம் பொறுங்கள், உங்கள் இருவரின் கூச்சலும், கும்மாளமும் காதைத் துளைக்கிறது. சத்தத்தை நிறுத்தி, சாவகாசமாக நான் விசாரணை செய்ய வழிவிடுங்கள்’ என்று ஐ. நா. சபையின் திருத்தூதுவர்கள் ஒருவர்பின் ஒருவராக-நெட்டையரும் குட்டையருமாக வந்து வந்து போனர்கள்; இப்போதும் ஒருவர் வந்திருக்கிருர்.

இதற்கிடையிலே, இந்தியாவுக்கும் இல்லை பாகிஸ்தானத்திற்கும் இல்லை, காஷ்மீரம் தனி நாடு; அந்தத் தனி நாட்டின் முடிசூடா மன்னன் நான் என்று கூலியாகிவிட்டார் என்றனர் சிலர்; நன்றி நினைக்காத மரக்கட்டையாகிவிட்டார் என்றனர் சிலர். பழங் காலத்து பாதுஷா நிலைக்குத் தன்னை காஷ்மீரத்தின் ஏகச் சக்ராதிபதியாக ஆக்கிக்கொள்ள முனைந்துவிட்டார் என்றனர் சிலர். இதெல்லாம் இல்லை. நேருவின் பேச்சுக்கு எதிர்ப் பேச்சுப் பேச துணிந்துவிட்டார்; அதனுல்தான் சிறையிலடைக்கப்பட்டார் என்றனர் வேறு சிலர்.

இந்தக் குற்றச் சாட்டுக்களில் ஓரளவு உண்மை இல்லாமலிருக்காது என்பது உண்மையானுலும், இவைகளைத் தெளிவாக-தைரியமாக யாரும் அப்போது சொல்லவில்லை. அதுமட்டுமல்ல, இந்தக் குற்றச் சாட்டுக்களைச் காட்டியே ஓர் மனிதனை நீதிமன்றத்தின்முன் நிறுத்தி நியாயமான தண்டனையை வாங்கிக் கொடுத்திருக்கலாம். தன்னை நம்பிப் பின்பற்றும் பல லட்ச மக்களை, நெஞ்சாற அமெரிக்கா போன்ற இலாபநோக்குள்ள அரசாங்கத்திற்கு காட்டிக்கொடுப்பதென்பதுசராசரிஅறிவுபடைத்த சாதாரண மனிதனும் மன்னிக்க முடியாத துரோகம்.

தால் அப்துல்லாவை வெளிவிட்டுவிட்டதுபோலவும் கயிறு திரிக்கப்படுகிறதே தவிர உண்மை நிலைமையை தெரிந்து கொள்ள முடியவில்லை.

அப்துல்லா சிறை வைக்கப் பட்டிருந்தபோது காஷ்மீரப் பிரச்னை எந்த நிலையில் இருந்ததோ அந்தக் குழப்ப நிலையிலிருந்து ஒரு சிறிதும் மாறவில்லை என்பது மனச்சாட்சியும் அரசியலறிவும் படைத்த யாருக்கும் தெள்ளெனத் தெரியக்கூடியதாகும். இந்தியாவின் வெறுப்புக்கிடையிலும் கிரகாம்போன்ற மத்யஸ்தர்கள் வருவதும், மனதைக் கல்லாக்கிக்கொண்டாவது, அவருக்கு ‘வரவேற்பு’ அளிப்பதும் போன்ற வகையில்தான், பிரச்னை இழுபறியாகிக்கொண்டிருக்கிறது.

ஏன் நிலை நீடித்து வருகிறது? யாருக்கும் தெரியாது!

ஆனல், தெரியாதவைகள் அத்தனையையும் தெரிந்ததாக மட்டுமல்ல, அதற்குக் கண்ணுங் காதும், மூக்கும் விழியும் வைத்துப் பேச இந்த நாட்டுப பத்திரிகைகள், உலகத்தோர் வியக்கும் அளவுக்கு முன்னேறி விட்டிருக்கின்றன. கடந்த நாலரை ஆண்டு

ஒன்றும் இல்லை. விடுதலையான அப்துல்லா பேசும் பேச்சுக்களிலிருந்து இது நன்ருகத் தெரிகிறது.

அப்துல்லா விடுதலையாகும் சேதி அடிபடத் தொடங்கிய நாளிலிருந்து, நாலரை ஆண்டுச் சிறைவாசத்தில் அவர் மனது பெருமளவுக்கு மாறிவிட்டிருக்கும்; தான் செய்த தவறுகளுக்குத்தக்க கழுவாய்த் தேடிக் கொண்டு, முன்னேற்றப் பணியில் ஈடுபடுவார் என்று எல்லா இதழ்களும் உரத்த குரலில் ஓலமிட்டன!

ஆனல், நடந்தது என்ன?

‘சிறை பிடிக்கப்பட்டபோது நான் கொண்டிருந்த கருத்துக்களை ஒரு சிறிதும் மாற்றிக் கொள்ளவில்லை’ என்று முழக்குகிருர், அவர்!

உலகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் தூதுவர் காரியாலயக் கிளைகளைத் திறந்துவைத்துக் கொண்டு ஆடம்பர விளம்பரத்திலும், அச்சடித்த இதழ்களிலும் அநியாயமாக கோடிக்கணக்கான டாலர்களை அமெரிக்கா செலவழித்து வருவதைக் காட்டிலும்,

— 11ம் பக்கம் —

மு. சண்முகம்

தென்றல்

அண்ணா அவர்கள் சென்னையில் ஆற்றிய சொற்பொழிவொன்றில் "தங்க ரேகை"யைக் குறிப்பிட்டார்கள். அதன் காரணமாகவே இக்கட்டுரை எழுத ஆர்வம் ஏற்பட்டது. தங்க ரேகை! கோலார் - தங்கவயலில் அது கண்டுபிடிக்கப்பட்ட பாடும், அதனால் வெள்ளையர்கள் அடைந்த லாபமும் கொஞ்சம் அல்ல.

தங்க ரேகை

"சாதுவன்"

மைசூர் மாநிலத்தில், கோலார் மாவட்டத்தில் உள்ள ஒரு வட்டமே, கோலார் தங்க-வயல். கோலார் தங்க வயல், தமிழ் நாட்டோடும், ஆந்திர எல்லையோடும், ஒட்டியுள்ள ஒரு நிலப் பகுதி. எங்கும் ஒரே கள்ளியும் செடி, கொடிகளும், அடர்ந்த நிலப் பகுதி. மலை வளம் கொண்டதல்ல, எனினும், கனிப் பொருள் நிறைந்தது.

வெகு நாட்களுக்கு முன்பே, இப்பகுதியில் தங்கம் எடுக்கப்பட்டு வந்துள்ளது. முதலில், மக்கள், தரை மட்டத்திலிருந்தே தங்கத்தை எடுத்தார்களாம். பாறைகளில் உள்ள தங்கம், பொடியாக்கப்பட்டும் பிரிக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டதாம்.

திப்புவின் காலத்தில், குழிகள் தோண்டப்பட்டு, பாறையுடன் கலந்திருந்த தங்கத்தை வெட்டி மேலுக்கு கொண்டு வரப்பட்டதாம். சுரங்க வேலை ஆரம்பமான காலம் அதாகத்தான் இருக்க வேண்டும். அவர் காலத்தில் உபயோகிக்கப்பட்ட உபகரணங்



கள், இன்னும் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளன.

தங்கச் சுரங்கம்:

திப்புவின் காலத்திற்குப் பிறகு, 1802-ம் வருடம்தான் சுரங்கம் தேண்டப்பட்டது. லெப்டினன்ட் ஜான்வாரன் என்பவர், சர்வே தொழிலில் ஈடுபட்டிருந்தபொழுது, மக்கள், உரிகம் மாரிகுப்பம் கிராமப் பகுதிகளில் மண்ணைக் கழுவி, அதிலிருந்து தங்கம் எடுப்பதையும் குழிகள் தோண்டி அவைகளிலிருந்து "பொன் கற்கள்" எடுப்பதையும் கண்டான். அதன் பிறகு அவ்வெள்ளையன், இப்பகுதிகளில், தங்கம் காணும் ஆராய்ச்சியிலீடுபட்டு, மண்ணிலுள்ள தங்கம் 130 மைல்வரை படர்ந்திருப்பதைக் கண்டான். அவன் ஆராய்ச்சியை முடித்துக் கொண்டு தனது ஆராய்ச்சியின் முடிவை, பலருக்கு தெரிவித்து உதவியை வேண்டினன். எவரும் கவனம் செலுத்தாமற் போகவே, அப்பணி தொடர்ந்து செயலாற்றப்படாமல்,... 70 வருட காலம் வீணாக்கப்பட்டது.

பிறகு, 1871-ல், மைக்கள் லாவல் என்கிற வெள்ளைய இராணுவ வீரன், இந்திய உபகண்டத்தின் பல்வேறு பகுதிகளில் கனிப்பொருள் ஆராய்ச்சி செய்து வரும்போது, தங்க வயல்— (கோலார்) அவன் கருத்தை ஈர்த்தது. அதன் பயனாக சங்க யெல் உருவாயிற்று. 1873-ல், மைசூர் மாநில சர்க்காருடன் ஒப்பந்தம் செய்ய மனு தாக்கல் செய்தான். 1875-ல் ஒப்பந்தம் பதிவாக்கப்பட்டது. தொடர்ந்து வெள்ளையனுக்கு மூன்று வருட காலம் ஆராய்ச்சி நடத்தவும், "இரண்டு" சதுர மைல் கொண்ட 19 தண்டு நிலங்களை ஆராய்ச்சி செய்யவும் அனுமதிக்கப்பட்டது. ஆராய்ச்சி காலத்தில், வெற்றி பெற்றால், கிடைக்கும் பலனில், மைசூர் மாநில சர்க்காருக்கு பத்து சதவிகிதம் பங்கு தரவேண்டுமென்று ஒப்பந்தம் ஆயிற்று. இருபது வருடம் - ஒப்பந்த காலமாக நிர்ணயிக்கப்பட்டது. இது தான் முதல் ஒப்பந்தம்.

லாவலுக்கு, உடந்தையாக, கர்னல் ஜார்ஜ் டிலாபோர்ட், பெரஸ் போர்டு என்பவர்களும், இன்னும் சிலரும் இருந்தார்கள். 1877-ல் லாவல் தன் உரிமைகளை பெரஸ் போர்டுக்கு அளித்துவிட்டார்.

ஒப்பந்தம் கைக்கு வந்ததும், பத்து சதவிகிதம், ஐந்தாகவும், 20 வருடம் 30 வருடமாகவும் மாற்றப்பட்டது. பிறகுதொடர்ந்து 1881 லிருந்து 1884 வரை சுரங்கங்கள் வேலை செய்யத் துவக்கிவிட்டன 1884-ல் எதிர்பார்த்த அளவைவிட, தங்கம் அதிகம் கிடைக்க ஏதுவாயிருந்தது.

1891-ல் பெங்களூர் மாவட்டத்தைத்தவிர, மற்ற மாவட்டங்களில் 97 சதுர மைல் நிலப் பகுதி சுரங்க தொழிலுக்காக வெள்ளையர்களால் குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது 1893-ல் பெங்களூருக்கும் தங்க வயலுக்கும் "இருப்புப்பாதைத் தொடர்", நிருவப்பட்டது. தங்கச் சுரங்கத்திலிருக்கும், "தங்க ரேகை" ஆராய்ச்சியில், "தார்வார்" பகுதிவரை ஓடியிருப்பதாகக் காணவே வெள்ளையர்கள் தங்க சுரங்கப் பணியிலே மும்முரமாக ஈடுபட்டனர். பல வருடங்கள் தொடர்ந்து தங்கத்தை வெட்டி எடுக்க வேண்டிய அளவு தங்கம், "இத்திருவிடத்திலே"-புதைந்திருந்தது. இன்னும் அப்படியே!

1902 வரை தங்கச் சுரங்கப் பணி, நீராவி இயந்திரங்களைக் கொண்டு இயக்கப்பட்டு வந்தது. 1902, ஆகஸ்டு திங்கள் "சிவசமுத்திர"த்திலிருந்து மின்விசை கொணரப்பட்டு, மின்விசை இயந்திரங்கள் நிருவப்பட்டன. அன்றிலிருந்து 1956 நவம்பர் திங்கள் 23-ம் நாள் வரை, வெள்ளையர்களால், தங்க சுரங்கம் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

கோலார் தங்கச் சுரங்கம் நான்கு பெரிய பிரிவுகளாக இயங்கி வந்தது. அவைகள் 1. சாம்பியன் ரீப்ஸ், 2 மாரிகுப்பம், 3. உரிகம், 4, நந்திதுருகம்- ஆக நான்கு.

ஒவ்வொரு பகுதியும் தனித்தனி அதிகாரத்துடன் இயங்கி வந்தது. வெள்ளையர்கள் நிர்வாக காலத்தில்அவர்களுக்குகிடைத்த மொத்த இலாபம் 500 கோடி ரூபாய்களுக்கு மேலாக இருந்தது அவர்கள் முதலீடு செய்தது முதல் ஆரம்ப காலத்தில் $2\frac{3}{4}$ லட்சம், பிறகு முன்னேற்ற பாதைகளில், செலவழிக்கப்பட்டது இன்றுவரை 3 கோடி ரூபாய்.

தேசிய மயமாக்க, மைசூர் மாநில சர்க்கார், வெள்ளையர்களை, தங்க சுரங்கங்களை விட்டு விட்டு வெளியேறச் செப்பினர். கனம் அநுமந்தையா அவர்கள் இதை ஆணித்தரமாக பேசினர் பல இடங்களில். ஆனால் இந்திய பேரரசினர், வெள்ளையர்களுக்கு ஆதரவு தரும் முகத்தான், வெள்ளையர்கள் கேட்ட "நஷ்ட ஈடு", பணத்தை கொடுத்துவிட சிபாரிசு செய்தனர். நேருப் பிரதமர் இதற்காக வந்து வாதங்கள் புரிந்து சென்றது சிதம்பர ரகசியம்! இதுவரை அதையே கிளிப்பிள்ளை போல் செப்பி வருகிறார் நேரு. பெருமகனர் அவ்வளவு ஈடுபாடு வெள்ளையர்களுடன் நேருவுக்கு, சில தினங்களுக்கு முன்பாக, அறிவிக்கப்பட்ட நஷ்ட ஈடு, 1 கோடியே 69 லட்சம் ரூபாய்கள்.

கோலார் தங்க வயலும்- தொழிலாளர்களும்:

கோலார் தங்க வயல் சுமார் இரண்டு லட்சம் ஜனத்தொகையைக் கொண்டது. சுரங்கங்களில் பணியற்றுவோர் சுமார் 17 ஆயிரம் பேர். அவர்களுக்கு என நிலப் பகுதிகளில் குடியிருப்பு வசதி அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடிசையும் 8 சதுர அடிகள் கொண்டது. வெகு எளிதில் பிரித்து எடுக்கவும், கட்டி முடிக்கவும் உரிய முறையிலே மூங்கில் தட்டிகளால் அமைக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களில் பெரும்பாலோர், வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திராவிடப் பெருங்குடி மக்கள் எஞ்சியுள்ளோர், ஆந்திரப் பகுதியினரும், கருநாடகப் பகுதியினரும் ஆவர்.

தொழிலாளர்கள் இரண்டு பிரிவுகளாக்கப்பட்டு பணிமனையில் வேலையில் அநுமதிக்கப்படுகின்றனர். 1. சுரங்கத்தில் ஆழ கீழ் சென்று பணி புரிவோர். 2. தரை மட்டத்திலிருந்தே பணி புரிவோர்.

முதற் கண்ட தொழிலாளருக்கு தினக் கூலி $1\frac{1}{4}$ ரூபாய். இரண்டாமவற்கு 1 ரூபாய். தினம் எட்டு மணி நேர வேலை. நாள் ஒன்றிற்கு மூன்று வேளை (Shift) பணி புரிகின்றனர். சுரங்கங்களில் பணிபுரிய-கீழ் நோக்கி செல்ல (Lift) லிப்ட்டைப் போன்று உள்ள பெரிய கேஜ் என்ற சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 10 ஆயிரம் அடிகளுக்கு கீழ்வரை பூமியை குடைந்து தங்கம் மேலுக்கு கொண்டு வரப்படுகிறது.

தொழிலாளர்கள், அடிப்படை தேவைகளான, குடிநீர், மருத்துவமனை எல்லாம் கம்பெனியார் நிர்வாகத்திலுள்ளது. பெரிய மருத்துவமனை தொழிலாளர் நலன் குறித்து நிருவப்பட்டுள்ளது. பல நவீன சாதனங்கள் உள்ளன இவை தவிர, பொழுது போக்கிடங்களும், விளையாட்டு இடங்களையும்அமைத்துத் தந்துள்ளனர்.

தொழிலாளர்கள், பயங்கர



சூழ்நிலையிலும் வேலை செய்ய வேண்டியவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். எப்பொழுது எந்த ஆபத்து நேருமோ எவரும் அறியார். ஆகையால் பாறை வெடிப்புக்கும, விஷக் காற்றிற்கும் பலர் பலியாகி, தங்கள் உயிர்களை அர்ப்பணிக்கின்றனர்.

தங்க வயல் பார்வைக்கு சிறு நகரமாக காட்சி அளிப்பினும், பல நகரங்களை அழகுபடுத்த உதவுகிறது. இங்கு உற்பத்தியாகும் தங்கம், உலக உற்பத்தியில் 7-ல் ஒரு பங்கு உடையது. தங்கம பிரித்து எடுக்கப்பட்ட மண், குவிக்கப்பட்டுள்ளது— பார்வைக்கு மலைத் தொடர் போல காட்சி தரும். 7 கோடி டன்களுக்கு மேலிருக்கும் அவற்றின் எடை. நாள் ஒன்றுக்கு 800 அவுன்ஸ் தங்கம் உற்பத்தியாகிறதாம. "திராவிடத்தை" வெள்ளையர் சுரண்டியதை வெளிப்படுத்துவது போலிருக்கு, மேலே குவிக்கப்பட்டிருக்கும் தங்கம் நீக்கிய மண்". ★

இதுதான் திராவிடநாடு

கா. அப்பாதுரையார்

-15-

வருணாசிரம தருமம் துணைக் கண்டத்தில் அறிவை, பண்பை எந்த அளவு கறைப்படுத்தியுள்ளது என்பதை அளர்ந்து பார்க்க வேண்டுமானால், காந்தியடிகள், இராமகிருஷ்ணர், தாகூர் போன்ற மனிதருள் மாணிக்கங்களின் அருட்பார்வையே அது களங்கப்படுத்தியுள்ளது என்பதைநாம் காண வேண்டும். ஜனாப் ஜின்னா போன்ற பகுத்தறி வளர்ந்த் தேசீயமுஸ்லிம் அறிஞர் கூடக காந்தியடிகளை எளிதில் உணர முடியாமற் போனதற்கும் இந்தியாவில் இனி இஸ்லாம் வாழமுடியாது என்று மனக் கசப்புற்று விட்டதற்கும் திராவிட இயக்கத்தவர் பலர் காந்தியடிகள் வாழ்ந்த காலத்தில் அவர் உயர் பண்புகளை எளிதில் காண முடியாமற் போனதற்கும் காரணம் அவர் வருணாசிரம தருமத்தைச் சனாதன தருமம், கடவுள் நெறி என்று ஏற்றதுடன் மட்டுமன்றி, அதுவே இயேசுவும், முகமது நபிகளும்கூடச் சென்றெட்டிவிடாத உயர் நெறி, உயர் தெய்வீக நெறி என்று புது விளக்கங்கள் தந்ததேயாகும். விவேகானந்த அடிகள் கேரளத்தைப் பார்த்து—அதன் சாதி மத அநீதிகளைக் கண்டு அதை ஒரு பைத்தியக்காரர் கண்காட்சிச்சாலை என்றாராம்! அந்தப் பெயர் உண்மையில் ஆரியர் உலாவும் வரை இந்தியத் துணைக் கண்டம் முழுமைக்கும்—ஆரியம் இன்று புதிதாகப் பரவி வரும் சில வகை, பர்மா, மலாயா ஆசிய நாடுகளுக்கும் முற்றிலும் பொருந்தும் என்னலாம்!

ஆரியராவது திராவிடராவது என்று கூறும் ஆரியருக்கே, அறிஞருக்கே இதுவரை நாம் கூறிய விளக்கங்கள் ஆகும். தமிழகத்துக்கு வெளியேயுள்ள அறிஞர்களுக்கும் இவ்விளக்கங்கள் பயன்படக்கூடும். ஆனால் தமிழகத்துக்குள் இவ்விளக்கங்கள் பெரும்பாலும் தேவைப்படமாட்டா. திராவிட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம், நாடு நகரரெங்கும், பட்டி தொட்டி எங்கும் அறிஞர் அண்ணா அவர்களின் அறி வளர்ந்த அழகு விளக்கங்களாலும், அவர் இளவல்கள், நங்கையர்கள் பிற அறிஞர்கள், கலைஞர்கள், கவிஞர்களின் பேருரைகள், கட்டுரைகள், கலைத் தொகுதிகளாலும் இவை யாவற்றையும் பொது மக்கள் உள்ளங்களிலே, வீட்டுத் தாய்மார் உள்ளங்களிலே கூடப் பசுமரத்தாணி போல் பதியவைத்துள்ளது. ஆனாலும் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு வெளியே இன்னும் உலவ இடம் கிடைக்கும் இடங்களில் வேலைகளில்—விளக்கம்தர முடியாத போதுகூட அறிவுக் குழப்பம் தரும் முறையில் சில பலர் பேசுகின்றனர்.

திராவிடமா, அது என்ன மொழிச் சொல்? தனித் தமிழ்ச் சொல்லா. சமஸ்கிருதச் சொல்லா? இலக்கியத்தில் அதற்கு வழக்கு உண்டா? வடவர் சொல்லையா தமிழர் வழங்குவது? திராவிடர் என்றால் ஓடி வந்தவர், போக்கிரிகள் என்றல்லவாபொருள்? அதை விட்டுவிட்டுத் 'தமிழன்' 'தமிழ்நாடு' என்று சொன்னாலென்ன?

இக்கேள்விகளுக்கு விளக்கங்கள் அடிக்கடி மேடைகளில், பத்திரிகைகளில் தரப்பட்டும், கேள்விகள் கேட்கப்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றன. இதற்கு ஒரு காரணம் உண்டு. 'கோல்டுஸ்மித்' என்ற ஆங்கிலக் கவிஞரின் 'பாழ்பட்ட ஊர்' என்ற கவிதையில் 'தோற்று விட்டாலும் விடாது வாதாடும்' ஒரு நாட்டுப்புற ஆசிரியர்பற்றி அவர் வருணிக்கிறார்; (And though defeated, he would argue still) ஆனால் அங்கே ஆசிரியர் ஊரில் தன்மதிப்புப் பேணும் பழம் பாணியிலேயே அவ்வாறு செய்கிறார். இங்கே நோக்கம் இதுவன்று. 'திராவிட இயக்கம் படித்தவரையும் ஆட்கொண்டு விட்டது. படியாதவரையும் ஆட்கொண்டுவிட்டது. ஆகவே அரைகுறைப் படிப்பினால் குழம்புபவரையாவது சற்றுக் குட்டைக் குழப்புவோம்' என்ற எண்ணமே இவ்விடாக்கேள்விகளுக்குரிய காரணமாகும். ஆனாலும் இக்கேள்விகள்தான் திராவிட இயக்கத்தை முழு நிறை அளவில் ஆழ்ந்து வேரூன்றிய ஒரு தேசிய இயக்கமாக்கி வருபவை? ஏனென்றால் கேள்வி கேட்பவர் உள்ளத்திலேயே, தடுமாற்றத்திலேயே திராவிடம் புகுந்துகொண்டிருக்கிறது! விடை விளக்கங்கள் திராவிட இயக்கத்தை, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒரு காலங்கடந்த இயக்கமாக தேசங் கடந்த புகழ் மரபாக, மனித இனத்தையே வாழ்வித்து வாழும் தகுதியுடைய பண்பாக மாற்றிவிடும் என்பதில் ஐயமில்லை.

திராவிடம் என்ன மொழிச் சொல்? —என்ன மொழிச் சொல்லானால் என்ன அப்பனே!

காங்கிரஸ், சோஷலிஸ்ட். கம்யூனிசம் என்ன மொழிச் சொல் என்று கேட்டாயா? இந்தியா, இந்து மதம் என்ன மொழிச் சொல் என்று எந்த அகராதியையாவது-தமிழ், தெலுங்கு சமஸ்கிருதம், இந்தி—எந்த மொழி அகராதியையாவது எடுத்துப் பார்த்தாயா, தம்பி! உன் பெயர், உன் தாய் தந்தையர், அண்ணன் தம்பி, அக்காள் தங்கையர் பெயர்கள் என்ன மொழிச் சொற்கள் என்று எண்ணிப் பார்த்ததுண்டா? நம் நாட்டுத் தலைவர். நம் தமிழ்க் கவிஞர், தமிழ்ப் புலவர் பெயர்களில்கூட எத்தனை பெயர்களில் தமிழ் இடம் பெற்றிருக்கும்? இவற்றையெல்லாம் கேட்கக் கருதாதவர்கள் நாவில், 'திராவிடம் என்ன மொழிச் சொல்?' என்ற கேள்வி எழுகிறதென்றால், அதுவே திராவிட இயக்கத்தின் மாபெரு வெற்றிக்கு ஒரு சான்றுயிற்றே! திராவிட இயக்கம் வளம் பெற்றோங்கியுள்ள இந்தத் தலைமுறையிலன்றி, முந்திய அடிமைத் தலைமுறைகளில் இக்கேள்வியை எவரே கேட்டிருக்கக்கூடும்? எவருக்குத்தான் கேட்கத் தோன்றியிருக்கும்?

திராவிட இயக்கத் தந்தை பெரியார் கேட்டிருக்க முடியாத கேள்வி இது — திராவிட முன்னேற்றக் கழக ஊழியிலே, திராவிட இயக்க எதிரிகளே கேட்கின்றனர், கேட்டு விட்டனர்!

தமிழகத்துக்கு மிக மிக நல்ல காலம் பிறந்துவிட்டதென்றே கூற வேண்டும்?

திராவிடம் தனித் தமிழ்ச்சொல்லா? சமஸ்கிருதச் சொல்லா?

ஆகா, 'மறைமலை' மணம் கமழும் கேள்வி! இக்கேள்வியில் திராவிட இயக்கம் மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழக மணமே வீசுகிறது! இதை ஆசிரியர் மறைமலையடிகள் கேட்டிருக்கலாம், அவர் மாணவ சிகாமணிகள்—இல்லையில்லை, சிகாமணிகள் சமஸ்கிருதம்-தலைமணிகள் கேட்டிருக்கலாம்! திராவிட இயக்கம் ஒளியுடன் ஆசிரியர் மறைமலையடிகளின் மரபொளியும் கலந்த இணையொளிகளான தற்போதைய தி. மு. க. வின் பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கேட்டிருக்கலாம். முன்னாள் பேராசிரியர் இந்நாள் சட்ட மன்றவாணர் க. அன்பழகன் கேட்டிருக்கலாம். இவர்களல்லாவிடில் பேராசிரியப் பேரறிஞர் தேவநேயப்பாவாணர் முனைவர் பேராசிரியர் மு. வரதராசனார் அவர்கள் கேட்டிருக்கலாம்!

ஆனால் இவர்கள் எவரும் கேட்கவில்லை? இவர்கள் எல்லாருமே தமிழினத்தை, தமிழின மொழிகளை, தமிழின நாகரிகத்தை உலகுக்கு எடுத்துரைக்கத் 'தமிழ்' என்ற சொல்லின் போதாமையை—குறைபாட்டை உணர்ந்து, தேயாதபழம் பெருந்தமிழ் என்ற பொருளுடைய 'திராவிடம்' என்ற சொல்லை வழங்கியுள்ளனர்.

ஆரியருள் ஆரியத்தின் முன் தமிழுக்குப் போராட மார் தட்டி முன் வந்த பெரியார் பரிதிமாற் கலைஞர் தமிழராகியதும் பெயர் சமஸ்கிருதப் பெயராய் இருக்கக்கூடாதென்பதற்காக, சூரியநாராயண சாஸ்திரியார் என்ற வீரமைந்த பெயரைப் பரிதிமாற் கலைஞர் என்று மாற்றினார். அவர் அறிந்தா வழங்கிய சொல் 'திராவிடம்'.

தமிழ் தனித்தியங்கவல்லது என்பதை முதன் முதல் நிலை நாட்டிய பேரறிஞர்—சைவ உலகெங்கும் சமய உலகெங்கும் பெரும்புகழ் நிறுவிய தம் பெயரை, சுவாமி வேதாசலம் என்னும் பெயரையே மாற்றி 'மறைமலையடிகள்' என்று புது வழக்கு ஏற்படுத்தி அதையும் இன்று நாடறியச் செய்துவிட்ட, தமிழறியச் செய்துவிட்ட பெரியார்— நூற்றுக்கணக்கான தம் ஏடுகளிலும் சொற்பொழிவுகளிலும் ஒரு சமஸ்கிருதச் சொல்கூட வராமல் பேசிய, எழுதிய தனித் தமிழ்த் தறுகணாளர்—அவர் கேட்கவில்லை, திராவிடம் எம்மொழிச் சொல்லென்று— அவர் வழங்கிய சொல்லே அது!

ஆசிரியர் மறைமலையடிகளாரும் அவர் காலத்தவரும் 'திராவிடம்' சமஸ்கிருதச் சொல் என்றுதான் கருதினார்கள். ஆனால் அது 'தமிழ்' என்பதன் சமஸ்கிருதத் திரிபு என்று அவர்கள் எண்ணியிருந்தார்கள். ஆனால் அந்த வடிவில்கூடத் தூய தனித் தமிழ்க் களிறாகிய அவர் அம்முறையில் அதைப் பயன்படுத்தியிருக்கமாட்டார். 'தனித் தமிழ்' என்பதற்கு, திராவிடத் தமிழ் என்பதுதான் பொருள் என்பது கருதியே அவர் அச்சொல்லைமட்டும்— அந்த ஒரே சமஸ்கிருதத் திரிபு வழக்குச் சொல்லைமட்டும்-வழங்க ஒருப்பட்டார். 'தனித் தமிழ்' என்ற தொடரில் 'தனி' என்பதற்கு என்ன பொருள் என்று யாராவது அவரிடம் கேட்டிருந்தால் அவர் என்ன சொல்லியிருப்பார்? 'திராவிடத் தமிழ்' என்றுதான் கூறியிருப்பார்? அதற்காகவே அவர் திராவிடர் என்ற சொல்லைப் பேணினார்-பண்பு கெட்ட இன்றைய தமிழைப் பண்புடைய தமிழாக்கவேண்டுமென்றால், அதைத் திராவிடத் தமிழ், தனித் தமிழ் ஆக்குக என்பதே அவர் கருத்து. திராவிடம் என்ற சொல் தமிழினத்தை, வாழ்ந்த பெருந் தமிழினத்தை, செந்தமிழ் கொடுந் தமிழ் என்று இடைக் காலத்தில் பிரிந்த தமிழகத்தை, செந்தமிழகமாகிய இன்றைய தென்னகத் தமிழகத்தை மட்டுமன்றி இலங்கையையும், கொடுந் தமிழகங்களாக இடைக் காலத்தில் மாறி இன்று வேறு பெயர் கொண்டிலங்கும் மலையாள, கன்னட, தெலுங்கு மொழிப் பகுதிகளையும் முழு நிறை தமிழகத்தை, அதன் மொழிமட்டுமன்றி கலை, இயல், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை ஒருங்கே குறிக்கும் சொல் என்ற காரணத்தினாலேயே சரியாகவோ தவறாகவோ ஆரிய வடிவம் பெற்ற சொல் என்று கருதியும்கூட அவர் இச்சொல்லைத் தாராளமாக எடுத்து வழங்கினார்.

- தொடரும் -

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 4 ‖ 25—1—58 ‖ இதழ் 28

நாடும் மொழியும் !

தமிழ் நாட்டில் இப்போது ஒரு புதிய எழுச்சி காணப்படுகிறது. பல தடவை தமிழர்கள் கொந்தளித்து எழுந்திருக்கிறார்கள்; முழக்கமிட்டிருக்கிறார்கள். அந்தக் கிளர்ச்சிகள், முழக்கங்களைக் காட்டிலும் இன்றையத் தினத்தில் தமிழகத்தில் எழுந்திருக்கும் எழுச்சி மகத்தானது, முக்கியத்துவம் பெற்றதாகும்.

கோவா அடக்குமுறையைக் கண்டித்து தமிழ் முகாம் ஒன்று சேர்ந்து குரல் எழுப்பிற்று. சென்னைநகரில் மட்டுமல்ல, நாடு முழுதும் கண்டனக் கூட்டங்கள் நடந்தன. அந்தக் குரல் கேட்கவேண்டிய இடத்திற்கு எட்டிற்று என்றாலும் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை.

இந்தியத் துணைக்கண்டத்து அரசியலார் 'தமிழ்நாடு' என்ற பெயரை ஒப்புக்கொள்ளாததைக் கண்டித்து தமிழகத்தின் எல்லாக் கட்சியினரும் ஒன்று சேர்ந்து சென்னை சர்க்காரையும், இந்திய சர்க்காரையும் கண்டித்துப் பேசினார்கள். கடையடைப்புகள், வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. சென்னையே பொங்கி எழுந்தது.

தேவிகுளம்-பீர்மேடு தமிழருக்கே உரித்தானதாகும் என்ற கிளர்ச்சி ஒன்று தமிழகத்தில் எழுந்தது. அதிலும் எல்லாக் கட்சிகளும் பங்கேற்றன. காரிய மாற்றின.

இந்தக் கிளர்ச்சிகளெல்லாம் எடுத்துக்கொண்ட காரியத்தை வெற்றிப் பாதைக்கு இழுத்துக்கொண்டு போயிற்றே தவிர நல்ல வெற்றியை—தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்காத்துக் கிடந்த வெற்றியைத் தரவில்லை. அதற்குக் காரணம் என்ன ? கிளர்ச்சிகளிலும், வேலை நிறுத்தங்களிலும் பங்கேற்ற கட்சிகளில் தி. மு. கழகம் ஒன்றினைத் தவிர ஏனைய கட்சிகள் அனைத்தும் இரட்டைப் படகில் கால் வைத்துக்கொண்டு நின்ற கட்சிகளாகும்.

ஆலை முதலாளியிடம் சம்பள உயர்வை எதிர்பார்க்கும்தொழிலாளி, ஒருவேளை, முதலாளி தன்னை வேலையினின்று நீக்கிவிட்டால் என்ன செய்வது என்று பயந்தால் அந்தத் தொழிலாளியின் மனம் எப்படிக் குழம்புமே, அப்படிப்பட்ட குழப்பக்காரர்கள் அரை மனத்துடன் பங்கேற்றதால் தமிழரின் கடந்த காலப் போராட்டங்கள் நிறைந்த வெற்றியைத் தரவில்லை. அரசியலில் அத்தகைய குழப்பக்காரர்கள் உண்டா என்றால், உண்டு; தமிழ்நாடு என்று பெயர்வைக்க விரும்பினார்கள், அதே நேரத்தில் டில்லியின் அன்பை இழக்கத் துணியவில்லை; தேவிகுளம் - பீர்மேடு வேண்டுமென்றார்கள், அதே போது நேருவின் கட்டளையை மீற அவர்களுக்குத் துணிவில்லை.

ஆனால் இப்பொழுது அரும்பு விட்டிருக்கும் போராட்டம் அது போன்றதா என்றால் இல்லை; ஆனால் அதைப் போலவே இதையும் பயன்படுத்தச் சிலர் முயன்றார்கள்; இன்னும் முயன்றுகொண்டிருக்கிறார்கள். சூழ்நிலை என்னவோ வேறொரு வடிவம் எடுத்துக்கொண்டு வருகிறது.

இந்தியா பிரியக்கூடாது என்பதற்காக இந்தியைப் புகுத்துகிறோம் என்கிறார்கள் டில்லியில் இருக்கிறவர்கள். இது வாதியின் கட்சி வாதம். பிரதி வாதியின் கட்சியான வேறொரு மக்கள்கட்சி,'இந்தி புகுத்தப்படுவதே தமிழ்நாட்டைப் புறக்கணிப்பதற்கே' என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் 'இந்தி பற்றிய பேச்சே இல்லை. இந்தி எங்களுக்கு அந்நிய மொழி.' என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது. இப்படி மூன்று கட்சிகள் தமிழகத்தில் உருவெடுத்திருக்கின்றன.

கடந்த போராட்டங்களுக்கும், இந்தப் போராட்டத்திற்கும் என்ன வேறுபாடு என்றால், இன்றையத் தினம் ஒன்றுகூட நினைப்பவர்கள், புதுக்குரல் எழுப்பிக்கொண்டிருப்பவர்கள் எந்தக் காரியத்திற்கும் டில்லியின் தயவை,கடைக்கண்பார்வையை எதிர்பார்த்துக் காரிய மாற்றக்கூடியவர்கள் அல்லர். அப்படிப்பட்டவர்களானால் அவர்களின் முழக்கத்தில் 'தனி நாடு' பிரச்சினை உயிர்பெறத் தேவையில்லை. டில்லியே வேண்டாமென்ற முடிவுக்கல்லவா வந்துவிட்டார்கள்.

எத்தனை கட்சி நடத்தினாலும், அந்த எல்லாக் கட்சிகளிலும் டில்லியின் உறவை வைத்துக்கொண்டிருந்த 'தினத்தந்தி' – ஆதித்தன் அவர்கள் தமிழ்நாடு பிரியவேண்டும் என்று எழுதத் தொடங்கிவிட்டார். வரவேற்கக் கூடியது. பல கட்சிகளுக்கு அவர் போனார். அதெல்லாம் கட்சி மாற்றமே தவிர கொள்கை மாற்றம் அல்ல. இப்போதுதான் அவர் கொள்கையையே மாற்றிக் கொண்டிருக்கிறார். தமிழ்நாடு பிரிய வேண்டுமென்கிறார்.

தமிழ்நாட்டின் நலனுக்காக எத்தனையோ கருத்துக்களை வெளியிட வேண்டுமென்று நினைத்தார் ஒருவர். இந்தப் பொங்கல் விழாவின் போது, தமிழகத்துக்கு எல்லா நலன்களையும் தரக்கூடிய மருந்து ஒரே ஒரு மருந்துதான் என்ற முடிவுக்கு வந்து அந்தக் கருத்தையும் அவர் வெளிப்படையாகச் சொல்லிவிட்டார். தமிழ்நாடு பிரிய வேண்டுமென்று. அவர் டாக்டர் மு. வரதராசனார். ஆருயிரம் மைல்களுக்கப்பால் இருக்கும் வெள்ளையன் அந்நியனானால், ஆயிரம் மைல்களுக்கப்பால் இருக்கும் வடவர்களும் அந்நியர்களே என்ற முடிவுக்கு டாக்டர் வந்துவிட்டார். தெரிவிக்கவும் செய்துவிட்டார்.

இராமாயணத்தில் ராமனுக்கு எவ்வளவு முக்கியத்துவம் உண்டோ, அந்த அளவுக்கு முக்கியத்துவத்தைக் காங்கிரசில் பெற்றவர் நேரு, என்று கருதிக்கொண்டிருந்தார் ஒரு பழம் பெரும் தொண்டர். காலம் அவர் இதயத்தைச் கனிய வைத்துவிட்டது. பண்டிதரை அன்புடன் பார்த்த அவர், இப்போது தமிழன் என்ற வீர உணர்வோடு நிமிர்ந்து பார்க்கத் தலைப்பட்டுவிட்டார். அவர் பிரச்சாரம் வலுப்பெற்றால் செட்டி நாட்டில் தனித் தமிழ்நாடு கோரிக்கைக்கு ஓரளவு ஆதரவு பெருகக் கூடும். அவர் யார்? காரைக்குடி சா. கணேசன் !

இப்படி, தனித்தனிக் கொள்கையுடையவர்கள் நாட்டைப் பிரிக்க வேண்டும் என்ற உணர்ச்சியைப் பெற்றுவிட்டார்கள் என்கிறபோது, நிச்சயமாக இந்த எழுச்சி கடந்த கால எழுச்சிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கக்கூடியதல்ல. புதியது ! எதிர்பாராதது ! வெற்றியைத் தரக் கூடியது.

சம்பள உயர்வையும் அதே நேரத்தில் முதலாளியின் சுடு சொல் வீச்சுக்கு அஞ்சுகின்ற மனப்போக்கையும் கொண்டவர்கள் இதில் சேராமல்,கடைந்தெடுத்த தமிழ் வீரர்கள், புடம்போட்டு எடுக்கப்பட்ட பிரிவினைப் பிரியர்கள் இயக்கத்தை வலுப்படுத்துவார்களானால், இனி எந்தக் காலத்திலும் வடவர்கள் எந்தக் காரியத்திற்கும் தமிழர்களை அடிமைப்படுத்தும் சூழ்நிலை ஏற்படாது. தற்கால சாந்தியை தி. மு. க. எதிர்பார்க்கவில்லை.

கண்ணதாசன் நிகழ்ச்சிகள்

குடந்தை

15-1-58 அன்று குடந்தை நகரில், பன்மொழிப் புலவர் நிதிச் சிறப்புக் கூட்டம் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆசிரியர் கண்ணதாசன் நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார். பன்மொழிப் புலவர் நிதிக்காக கண்ணதாசனிடம் ரூ. 300 கொடுக்கப்பட்டது.

மன்னார்குடி

16-1-58 காலை மன்னார்குடி தி. மு. க. சார்பில் பன்மொழிப் புலவர் நிதிச் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ப. நாராயணசாமி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். பன்மொழிப் புலவர்நிதிக்காக ரூ.250 கண்ணதாசனிடம் கொடுக்கப்பட்டது.

சென்னை

18-1-58 அன்று மாலை சென்னை மணவழகர் மன்றத்தின் சார்பில் தமிழ்த் திருநாள் விழா கொண்டாடப்பட்டது. **அறிஞர் அண்ணா** அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். ஆசிரியர் கண்ணதாசன், பன்மொழிப் புலவர் அப்பாதுரையார். அன்பு கணபதி, பகிரதன், அப்துல் சமது ஆகியோர் பேசினார்கள்.

கண்ணதாசன் கவிதை

'தென்றல்' பொங்கல் மலரில் இடமின்மையால் விடுபட்டுப் போன, ஆசிரியர் கண்ணதாசனின் நேரு வருகை பற்றிய 'புகழ் வளர்த்த சென்னை' கவிதை, இப்பொழுது தனியாக அச்சிட்டு அனுப்பப்பட்டு விட்டது. மலர் வாங்கிய தோழர்கள் விற்பனையாளர்களிடம் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

—பொறுப்பாளர்.

பிப்ரவரி முதல் வாரம் எங்கும் கிடைக்கும் !

முல்லை

— பிப்ரவரி இதழ் —

அறிஞர் அண்ணா
பன்மொழிப்புலவர்
கா. பாண்டுரங்கன்
க. அறிவழகன்
தமிழண்ணல்
வாணிதாசன்
கண்ணதாசன்

மற்றும் பலரது எழுத்தோவியங்களுடன்

'என் பாட்டை நான் கேட்டேன்'

—சுசிலா

மற்றும் பல சுவையான அம்சங்கள்

விலை அணா எட்டு.

முல்லை : : சென்னை-6.

வல்லபி

வேங்கி நாட்டுக்கும் வடக்கே சக்கரக் கோட்டத்தில் போர்முனையின்கண்ணிருந்த முதற் குலோத்துங்கன், சோழ மன்னன் அதிராசேந்திரன் கொல்லப் பட்டான் என்ற செய்தி கேட்டு; சோழ நாட்டை அடைந்து, கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழப் பேரரசனுக முடிசூட்டிக் கொண்ட சுமார் 21 ஆண்டுகளுக்கும் பின்; காலமெலாம் சோழருக்கு தொல்லை விளைவித்துக் கொண்டிருந்த பாண்டிய நாட்டினர்; சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி குழப்பம் விளைவித்தனர். சேரநாடும் பாண்டிய நாட்டைப் பின்பற்றியது. ஆனல், அக்குழப்பத்தில் தலைசிறந்து விளங்கியது வேள் நாடு.(தென் திருவாங்கூர்) வேள்நாட்டின் குழப்பநிலை கண்ட முதற்குலோத்துங்கன், தன் நன்மதிப் பைப்பெற்ற தானைத்தலைவன் நரலோக வீரனை அழைத்து, வேள் நாடு சென்று குழப்பத்தை அடக்கி, அமைதியை ஏற்படுத்தி விரைவில் வருக வென் வீரனுக்கு வேந்தன் கட்டளையிட்டான். மன்னனின் மதிப்புப் பெற்றவனல்லவா? மகிழ்சியுடன் புறப்பட ஆயுத்த மானுன்.

சோழ நாட்டுப்படை வேள் நாடு நோக்கிசெல்லப் போவதை அறிந்த நரலோக வீரன் மைந்தன் சூரை நாயகன், தானும் உடன் வருவதாகத் தந்தையிடம் தெரிவித்தான். மைந்தனின் விரும்பத்திக்கு மறுப்புரைத்தான் நர லோகவீரன், தனயன் தன் சொல்லை மீறத் துணிந்துவிட்டான் என்பதை யுனர்ந்த நரலோக வீரன், தன் மகன் சூரை நாயகனை அழைத்து; மைந்தனே! நீயோ, வயதில் சிரியவன்; நான் செல்லுகின்ற இடமோ குழப்பம்நிறைந்தது வேள் நாடு காணவேண்டுமென்று விருபுகிருய் நீ; ஆனுல் அதற்கு இது ஏற்ற சமயமல்ல. வேள்நாடு அமைதி யுற்ற பின்;ஓர் நாள் உனை அழைத்துச் செல்லுகின்றேன்'' என்று எவ்வளவுவோ எடுத்துச் சொல்லியும் சூரைநாயகன் கேட்டானில்லை. தந்தையே! நான் ஒரு கோழைக்கு மைந்தனுகப் பிறக்கவில்லை. வீரனின் மைந்தனுன நான் வீரனுகவே வாழ விரும்புகின்றேன். சோழப் பேரரசரின் தலைசிறந்த வீரர்களில் ஒருவரான நரலோக வீரனின் மைந்தன் கோழையா? வயதில் சிறியோனுக இருந்தாலும் நான் வீரம் குறைந்தவனல்ல என்பதை வேள் நாடு சென்றதும் விளக்கிக் காட்டுகின்றேன். நானும் படை வீரர்களில் ஒருவனுக வருகின்றேன் மறுக்காதீர்கள்'' என்று மன்ருடினுன் சூரைநாயகன். மறுப்புரைக்க முடியாமல் மனங் குழப்பிய நரலோக வீரன்; சிறிது நேர சிந்தனைக்குப் பின்னர், சூரைநாயகனை அழைத்து, "மாற்றுரின் வேலுக்கு மார்பு காட்டும் மைந்தனே! புறப்படு! படைகள் வேள் நாடு செல்ல ஆயுத்தமாயிருக்கும்'' என்றான். 'தந்தையே இதோ தயார்'' என்ருன் சூரை நாயகன். படைகள் வேள் நாடு நோக்கி விரைந்தன.

சோழ நாட்டுப் படைகள் வேள் நாட்டுக்குள் காலடியெடுத்து வைத்துவிட்டன; என்பதையுணர்ந்த குழப்பக்காரர்கள், மலைகளிலும், மலைக் குகைகளிலும், காடுகளிலும், ஓடி ஒளிந்துகொண்டனர். வேள் நாடு சென்ற படைகளுக்கு வேலை அதிகமில்லாமலிருந்தாலும்; குழப்பம் விளைவிப்பவர்களைப் பிடித்துவிட்டால் மீண்டும் குழப்பம் நேராமல் பாதுகாக்க வழியுண்டு என்று எண்ணிய நரலோக வீரன்; தன் வீரர்களை எல்லாத் திசைகளிலும் அனுப்பித் தேடினுன். இந்நிலையில், ஓர் நாள்; நரலோக வீரன் தன் கூடாரத்தில் அமர்ந்து ஆழ்ந்து சிந்தனையிலிருந்தான். அவ்வமயம்; ஒற்றனெருவன் ஓடோடி வந்து கூடாரத்திற்குள் நுழைந்து; நரலோக வீரனின் சிந்தனையைச் சிதறடித்துவிட்டான். "ஏன் இப்படி பதட்டத்துடன் ஓடி வந்தாய்? என்ன நடந்தது'' என ஒற்றனிடம் வினவினுன் நரலோக வீரன். பதட்டமில்லை தலைவரே! குழப்பத்தை உண்டுபண்ணும் கலகக்காரர்களின் தலைவன் மாலரையன், தற்போது தன் வீட்டில் இருக்கின்ருன். உடன் சென்று அவனைக் கைது செய்தால் வேள் நாட்டில் நம் வேலையே முடிந்துவிட்டது. விரைவில் புறப்படுங்கள்'' என, துரிதப்படுத்தினுன் ஒற்றன். "சோழ நாட்டு வீரனிடமா, சூழ்ச்சி செய்கிருன் மாலரையன். பார்க்கிறேன் அவனை. தாங்கள் செல்லலாம்'' என ஒற்றனை அனுப்பிவிட்டு; தன் படை வீரர்களில் சிலரைத் தன்னுடன் புறப்படும்படி கூறினுன். உடனே சூரை நாயகனும் தன் தந்தையுடன் புறப்பட்டுவிட்டான்.



படை வீரர்களுடன் விரைந்தான் நரலோக வீரன்; மாலரையன் வீடுநோக்கி குதிரைகளின் குளம்படிச் சப்தம் கேட்ட மாலரையன் வீட்டை விட்டு வெளியில்வந்து பார்த்தான். புலிக் கொடியைக்கண்டான். கிலி பிடித்துவிட்டது மாலரையனுக்கு. அவன் உள்ளத்தில் அச்சம் புகுந்ததெனினும்; எப்படியோ வீரர்கள் வீடு சேர்வதன்முன் தப்பித்துக் கொண்டான்.

மாலரையனின் ஒரே மகள் வல்லபி. சோழநாட்டு வீரர் மாலரையன் வீட்டு முன் வருவதற்கும் வல்லபி வீட்டினுள்ளிருந்து வெளியில் வருவதற்கும் சரியாக இருந்தது. சிறிது நேரம் நிசப்தம். அமைதி கலைந்தது. தன்படை வீரர்களை நோக்கி, வீட்டினுள் சென்று மாலரையனைக் கைது செய்யும் படி கட்டளையிட்டான் நரலோகவீரன். சிங்கத்தை யொத்த வீரம் அந்த சிங்காரியிடத்தில் இருந்தாலும்; சோழப் பேரரசின் படையல்லவா? சற்றுவிலகி நின்று வீட்டிற்குள் செல்ல அனுமதி கொடுத்தாள். இந்நிலையில் சூரை நாயகன் கண்களும் வேள் நாட்டு வேல் விழியும் மோதிக்கொண்டன. வெற்றி யாருக்கென்று சொல்வது. வீட்டினுள் சென்ற வீரர்கள் மகிழ்ச்சி யின்றி வெளி யேறினர். மாலரையன் தப்பிவிட்டான் என்ற படைவீரரின் சொற்கள் நரலோக வீரனின் மார்பிலே ஈட்டியைத்தாக்கியது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்தியது. கோபத்தால் கண்கள் சிவந்தன நர லோக வீரனுக்கு. உடனே மாலரையன் மகளை நோக்கி "பெண்ணே! நீதானே மாலரையன் மகள் வல்லபி'' என வினவினுன் நரலோக வீரன். "இல்லையென்று யார் மறுத்தது'' என கிண்டலாகவே பதிலளித்தாள் வல்லபி. எங்கே உன் தந்தை'' என்ருன் நரலோகவீரன். இருக்க வேண்டிய இடத்தில் இருக்கிருர்'' என்ருள் வல்லபி. வல்லபியின் பதில் சூரை நாயகனுக்கு உவகையூட்டியதெனினும்; அவளுடைய வீரப்பேச்சைக் கேட்டு தன் கண்களை அகல விரித்து மறு முறையும் உற்றுப் பார்த்தான். வல்லபியும் சூரை நாயகனை நோக்கினுள். நாணத்தால் இவள்முகம் சிவந்தது. நர லோக வீரனின் கேள்விக் கணைகளுக்கு அவள் அலட்சிய மாகவே பதில் சொன்னுள். நர லோக வீரனுக்கு கோபம் தாங்க முடியவில்லை தன் படை வீரர்களில் ஒருவனை அழைத்து, "இப்பெண்ணை நம் கூடாரத்திற்கு கட்டியிழுத்து வாருங்கள். அவள் இங்கு உண்மையைச் சொல்ல மாட்டாள். கேட்க வேண்டிய முறையில் தான் கேட்க வேண்டும் என்றவுடன், சூரைநாயகா! புறப்படு என்று தன் கூடாரத்தை நோக்கி குதிரையைச் செலுத்தினுன்.

அன்று இரவு சூரை நாயகனுக்கு தூக்கமே பிடிக்கவில்லை. எங்கு பார்த்தாலும் வல்லபியின் உருவமே அவன் கண்களுக்குத் தென்பட்டது. பருவமல்லவா? பல எண்ணங்கள் தோன்றத்தானே செய்யும் சோழப் பேரரசின் தானைத் தலைவர் நரலோக வீரனுக்கு! அந்த நாண்விழியாளிடம் தோல்வியா? வீரம் மிகுந்தவன்தான். இவளை எப்படியாவது, மணஞ் செய்துகொண்டு சோழ நாட்டுக்கு அழைத்துச் சென்றுவிட வேண்டும். தந்தை குறுக்கிட்டாலும் தயங்கக்கூடாது என்ற முடிவுக்கு வந்துவிட்டான். உறங்க நினைத்தானே தவிர உள்ளம் இடங் கொடுக்கவில்லை. வல்லபியை அழைத்து வந்த வீரர்கள் வல்லபியை ஓர் கூடாரத்துக்குள் கட்டி வைத்து காவல் புரிந்து வந்தார்கள். ஆதலால் அவளை தப்பிச் செல்ல வைக்க முடியாது என்ற எண்ணமோ; அல்லது தப்பித்துவிட்டால் நம்மையும் தப்பித்துவிடுவாளோ என்ற சந்தேகத்தின் காரணமாகவோ அவளைக் காவலிலிருந்து வெளியேற்ற சூரைநாயகன் எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. எண்ணுத எண்ணங்களையெல்லாம் எண்ணிக் கொண்டே அன்றிரவைக் கழித்தான்.

பொழுதும் புலர்ந்தது; வல்லபியைக் கொண்டு எப்படி மாலரையனை பிடிப்பது என்ற சிந்தனையிலேயே இரவைக் கழித்த காரணத்தால் நரலோக வீரனின் கண்கள் கலங்கியிருந்தன. கூடாரத்தை விட்டு வெளியேறிய நரலோக வீரன் அங்குமிங்கும் கடந்து கொண்டேயிருந்தான். கதிரவன் ககனத்தில், மேல் நோக்கிச் சென்று கொண்டிருந்தான். நரலோக வீரன் என்ன நினைத்தானே என்னவோ, தன் அருகே நின்றுகொண்டிருந்த படை வீரனிடம் "வல்லபியை இங்கு அழைத்து வா''வெனக் கட்டளையிட்டான். படை வீரன் வல்லபியைக் கட்டவிழ்த்துவிட்டு அழைத்து வந்து நரலோக வீரன் முன் நிறுத்தினுன். சூரைநாயகனும் அவ்வமயம் அங்கு வந்து சேர்ந்தான். நரலோக வீரன் நெற்றியில் சிந்தனைக் கோடுகள் படர்ந்தன. வட்ட நிலா முகத்தழகி வல்லபியிடமிருந்து மாலரையனைப்பற்றிய செய்தியைத் தெரிந்துகொள்ளமுடியுமா? என்பதைப்பற்றியதே அச்சிந்தனைக் கோடுகள். பல போர்க்களங்களிலே நரலோக வீரன் வெற்றி மாலை சூடி முதற் குலோத்துங்கனுல் "காலிங்கராயன்'' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவனுக இருப்பினும். அந்த கயல் விழியாளிடத்திலே கொஞ்சம் சிந்தனை செய்தான். எதற்கும் வளைந்து கொடுக்காத வல்லபியை நோக்கி; "வயதிற் சிறியவளாக இருந்தாலும் வல்லமையுடையவளே! நீ உன் தந்தையிருக்கும் இடத்தைச் சொல்ல மறுத்தால் உன் நிலமை என்னவாகும் என்பதைக் கிஞ்சித்தேனும் சிந்தித்துப் பார்'' என்ருன் நரலோக வீரன். "தன்னுட்டைக் காத்து தன்மானத்தோடு வாழ உயிரையும் பயணம் வைக்கத் தயாரான உத்தமனுக்குப் பிறந்தவள் நான். வாழ வேண்டுமென்று தான் நினைக்கிறேன் ஆனுல் மானமிழந்தல்ல'' என்ருள் வல்லபி. "வல்லபி! நீ வயதில் சிறியவளாயிருக்கின்ற காரணத்தால் சிறிது சிந்தித்து பதில் கூறு. சோழப் பேரரசர் வேள் நாட்டாருக்கு என்ன துரோகம் செய்தார்? வாழ வழியற்ற நாட்டார் என்று வசை பாடினுரா? இல்லை, மாட மாளிகையில் வாழ்பவரை மண் குடிசையில் தான் வாழ வேண்டுமென்ருரா? வேள்நாட்டு மக்களை வேதனையிலாழ்த்த வேண்டும்; அவர்களை வாழவிடக்கூடாது என்று நினைத்ததுண்டா? மனிதப் பண்போடு தானே நடந்துவருகிருர். சோழ நுட்சியிலே நீ என்ன தவறு கண்டாய்?'' என வினவினுர் நரலோக வீரன் "ஒப்புக்கொள்கின்றேன் படைத்தலைவரே! அண்டை விட்டார் எனக்குப் பொன் கொடுக்கிருர்; பொருள் கொடுக்கிருர்; மாட மாளிகைகள் கட்டித் தருகிருர். மகிழ்ச்சியோடு வாழ்வதற்கு ஏற்றுக் கொள்கிறேன். ஆனுல் அவர் விருப்பம்போல் விபசாரியாக வாழ முடியுமா? நல்ல வசதிகள் செய்து கொடுக்கின்றேன் ஆனுல் உனக்கு சுதந்திரம் கிடையாது, நீ அடிமையாகத்தான் வாழவேண்டுமென்ருல் யார்தான் ஒப்புக்கொள்வார்

— 10ம் பக்கம் —

- 9 -

நீலப் பட்டு விரித்ததுபோல் மாசுமறு இல்லாமல் இருக்கும் வானம், ஒரு நொடிக்குள், இப்படித் திரும்பி அப்படிப் பார்ப்பதற்குள் கன்னங்கரேல் என்று கருத்துவிடுகின்றது. வெள்ளை வெள்ளையாக மலைகள்போல், மாட்டு மந்தைகள்போல் ஆட்டுக் கூட்டம்போல் திரளாக மேகம் குவிந்துவிடுகின்றது. குவிந்த மேகம் மறுபடியும் ஒருநொடியில், இருந்த இடம் தெரியாமல் எங்கோ சிதறிப் போகின்றன. இந்த வானத்திலா அவ்வளவு மேகம் முன்னே இருந்தது. என்று திகைக்கும்படி ஆகிவிடுகின்றது. இயற்கை விளைக்கும் மாற்றங்கள் இவை.

இதைப்போல் வாழ்க்கையில் எப்போதாவது திடும் என மாற்றங்கள் ஏற்படுகின்றன என்றால் ஒரு நொடிக்குள் ஒரு பெரிய மாறுதல் விளைகின்றது என்றால் அது தேர்வு அறையில்தான். கல்லூரியாகட்டும், உயர்நிலைப் பள்ளியாகட்டும்தேர்வுத்தொடக்கமணி அடிப்பதற்கு முன்னே இங்கும் அங்குமாக மாணவர்கள் கும்பல் கும்பலாக நின்று எதை எதையோ பேசிக்கிடப்பர் என்னென்னவோ எண்ணிக் கிடப்பார். ஆரவாரமும் பரபரப்பும் அங்கே காணப்படும்.போர்க்களத்தில் இருக்கும் பரபரப்பு தேர்வு தொடங்குவதற்குமுன் வரை இருக்கும்.

தேர்வுமணி அடித்ததும் காற்றடித்து மேகம் கூடுவதைப் போல், கூடிய மேகம் கலைந்து சிதறுவதைப்போல் ஆரவாரம்களமாக இருந்த கல்லூரிக் கட்டிடம் அமைதியின் இருப்பிடமாகிவிடும். பேனா ஓடும் ஒலியன்றி வேறு ஒலி அங்கே எழுவது பெரும்பாலும் இல்லை. எங்கோ சில இடங்களில்தான் கொஞ்சம் 'கசமுச' ஒலி கேட்கும். இந்த பெருமாற்றத்திற்கு நிலைக்களனாக இருக்கும் தேர்வு அறை உண்மையிலே வியப்பின் விளை நிலம்தான்!

ஞானசம்பந்தன் தேர்வு எழுதிய அறையும் அப்போது அப்படித்தான் இருந்தது. கொஞ்ச நேரத்திற்கு முன்னே அங்கே பலவகையான காட்சிகள் காணக்கிடந்தன. அப்போதே படித்துத் தீர்த்துவிடுவதைப்போல பலபேர் கையில் புத்தகங்களையும் ஏடுகளையும் வைத்துக்கொண்டு நின்று படித்தால் நிலைக்காது என்று அலைந்து படித்துக்கொண்டிருந்தனர்.

'இது வருமா' என்று கேட்போரும், ஏன் இது வரக்கூடாதா என்போரும் நீ படித்தாயா அதை, எனக்கு இது நன்றாகத் தெரியும் என்று சொல்லிக்கொண்டு நிற்போருமாக பல வகைப்பட்டவர்கள் அங்கே காணப்பட்டனர்.

ஞானசம்பந்தன் மட்டும் ஒரு மூலையில் போய் நின்றுகொண்டு கீழே முளைத்திருந்த பசிய புல்லைப் பார்த்துக்கொண்டிருந்தான் இயற்கையின் இனிமையை நுகரும் நிலையில் அவன் அப்போது அங்கே நின்றுகொண்டிருக்கவில்லை. வேறு எதையும் காண இயலாததினால், காண விரும்பாததினால் எதையேனும் கண்டு தீரவேண்டுமே யென்று பச்சைப் புல்லை பார்த்துக்கொண்டு நின்றான்.

"என்ன சம்பந்தா உருப்போட்டதையெல்லாம் நினைவுக்குக் கொண்டு வருகின்றாயா" என்று இரண்டொருவர் அவனைப் பார்த்துக் கேட்டனர். 'ஆமாம்' என்று அவர்களுக்கு விடை கூறிவிட்டான்.

ஆனால் அவன் அப்போது பாடங்களை உருவும் போட்டுக் கொண்டிருக்கவில்லை; போட்ட உருவையும் நினைத்துக்கொண்டிருக்கவில்லை.

அன்று காலை மாத்தூரில் அடைந்த அல்லலை நினைத்துக் கொண்டிருந்தான். சம்பளப் பணம் வேண்டும் என்று தன் அன்னையைக் கேட்டுவிட்டான்; 'ஆகட்டுமடா கண்ணே' என்று அவளும் ஆர்வத்தோடு சொல்லி விட்டாள். ஆனால் அன்று இரவு பெரியசாமியிடம் மகனுடைய தேவையைச் சொல்லி சமாதானப்படுத்துவதற்கு அந்த அம்மாள் எவ்வளவோ பாடுகள்பட்டார்கள். ஆனால் பெரியசாமியுடன் சிவகாமியம்மாள் செய்த போராட்டம் ஞானசம்பந்தனுக்குத் தெரியாது.

மறுநாள் காலை பஸ்நிலையத்திற்குப் பெரியசாமியே 'வந்து பஸ் ஏற்றிவிட்டபோதுதான் தன் தந்தையின் மனம் என்ன பாடுபட்டிருக்கிறது என்டதை ஞானசம்பந்தன் உணர முடிந்தது.

பஸ் நிலையத்திற்கு வந்ததும் பெரியசாமி ஞானசம்பந்தனை அழைத்தார்.

"என்னப்பா..." என்று பாதி சொல் வாய்க்குள்ளும் பாதி சொல் வெளியிலுமாகக் கேட்டான்.

"இந்தா.. என்று பெரியசாமி கையை நீட்டினார். அந்தக்கையில் பத்து ரூபாய் நோட்டுகள் இருந்தன. எத்தனை என்று பெரியசாமியும் சொல்லவில்லை; எண்ணிப் பார்க்கவும் ஞானசம்பந்தனுக்கு இயலவில்லை.

"இது... இது" என்று ஞானசம்பந்தன் இழுத்தான்.

"ஆமாம் சம்பளத்திற்குத் தான்..." என்று சொல்லும் போதே பெரியசாமியின் சொற்கள் தயக்கம் கொண்டன.

நோட்டுகளை ஏந்தியிருந்த பெரியசாமியின் கரம் மெல்ல நடுங்குவதனை ஞானசம்பந்தன் கண்டான். அந்தக் கரங்கள் நடுங்குவதனைக் கண்டபோது அவன் மனமும் நடுங்கியது. சின்னப்பையனாக இருந்த ஞானசம்பந்தனை அந்தக் கைகள் எத்தனையோ முறை அடித்திருக்கின்றன. அப்போதெல்லாம் ஞானசம்பந்தன் அந்தக் கரங்களைக் கண்டு அஞ்சினானே ஒழிய இப்படி, நடுங்கியதில்லை. ஆனால் அடித்த அந்தக் கையில் நோட்டுக் கத்தையைக் கண்டதும் மனம் நடுங்கியது. கண்கள் கலங்கின. மகனுடைய கண்களில் நீர்முட்டி நிற்பதைக் கண்டபோது தந்தையின் கண்களும் கலங்கின. இந்தக் கண்ணீருக்கு அந்த ஆற்றல் இருக்கிறது. கண்ணீர் வெளிப்படுவதே இல்லை. ஆனால் வெளிப்பட்டால் தனியாக வெளிப்படுவதில்லை. தனக்கு ஒரு துணையையும் தேடிக்கொண்டுதான் வெளிவரும். கல்நெஞ்சனும் பிறர் கண்ணீர் கண்டு கலங்கித்தான் போகின்றான். திருவள்ளுவர் சொன்ன சொல் பொய் அல்ல; அன்பிற்கு அடைக்கும் தாழ் இல்லை; ஆர்வலர் புன்கண்ணீர் பூசல்தரும். என்றது எவ்வளவு பெரிய உண்மை.

நேற்று வரையில் சென்னையில் தெருக்களில் மக்கள் நெரிசலில் தந்தையை மறந்து, தாயை மறந்து, ஊரை மறந்து எங்கோ ஏனோ திரிந்துகொண்டிருந்த ஞானசம்பந்தனின் கண்களில் இன்று நீர். நேற்றுவரை மகன் மீது மாறாத கோபம் கொண்டிருந்த தந்தையின் கண்களில் நீர்!

அன்பிற்கு அடைக்கும் தாழ் இல்லைதான்!

கண்களில் கசிந்த நீரை யாராவது கண்டுவிடப் போகின்றார்களே என்று எண்ணியதும் பெரியசாமி மேல் துண்டால் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டு "என்னடா இது பைத்தியக்காரத்தனம்? ஏன் அழுகின்றாய் இப்போது? என்ன நடந்துவிட்டது? ரூபாய் தானே—போனால் போகிறது. கவலைப்படாதே" என்று சொன்னார்.

அடித்தபோது மனம் பட்ட பதைப்பைவிட தன் தந்தை அன்பைச் சொரிந்தபோதுஞானசம்பந்தனின் மனம்பட்ட பதைப்புதான் அதிகமானது. துடித்துப் போனான்.

"இல்லை, பா—இனி இல்லை. நன்றாகப் படிப்பேன்" என்று ஏதேதோ சொன்னான். இதற்குள் 'பாம்பாம்' என்று அலறிக் கொண்டு பஸ்ஸும் வந்துவிடவே நோட்டுகளை அவன் சட்டைப் பையில் திணித்து "போய் வா. நன்றாகப் படி" என்று சொல்லியனுப்பினார் பெரியசாமி. தேர்வு அறைக்கு வெளியே மணியடிக்கும்முன் ஞானசம்பந்தன் பச்சைப் புல் வெளியில் இந்தக் காட்சியைத் தான் கனவுபோல் கண்டு கொண்டிருந்தான்.

மணி அடித்து உள்ளேபோனதும் படித்திருந்தவர்கள் எல்லோரும் 'கிடுகிடு' என்று எழுதத் தொடங்கிவிட்டார்கள். ஆனால் ஞானசம்பந்தனைப்போல் படிக்காமல் விட்ட சில பேர்மட்டும் கற்பனை கை கொடுக்காமல் தவிக்கும் எழுத்தாளனைப்போல மோட்டுவளையையும் காலதர் வெளியையும் பார்த்துப் பொருமிக்கொண்டிருந்தனர்.

- தொடரும் -

மந்திரியார் வீட்டில்!

சி. ஆனந்தன், பி. எஸ்சி., பி. டி.

அந்த ஊர் முழுவதும் அந்தத் திடலிலே கூடியிருந்தது. மந்திரியாரே வந்திருந்து மாடுகளைத் தானமாக ஒரு சிலருக்கு வழங்கப்போகிருரேன்ருல் கூட்டத்திற்குக் கேட்கவும் வேண்டுமா? அந்தக் காலத்திலே இராம இராஜ்யத்திலே நடந்ததுபோல் இந்தக் காலத்து இராமஇராஜ்யத்திலும் ஓர் விந்தை நடப்பதைக் காண எல்லோரும் கூடியிருந்தனர். மந்தியார், மாடுகளைப பிடித்து ஒரு சிலருக்குக் கொடையாகக் கொடுத்துவிட்டு, எழுந்திருந்து பேசலானுர்:

"பொதுமக்களே!....மாட்டுப் பொங்கல் வரப்போகிறது! இந்த சமயத்திலே நம்நாட்டிலே மாடுகளில்லாத ஏழை மக்கள் ஆயிரமாயிரம் பேர் அல்லலுற்று அவதிப்படுகிருர்கள். மாடுகளில்லாவிட்டால் நாடுவளம்பெற முடியுமா? எனவே மாடுதான் நாட்டின்வளத்திற்கு அடிப்படை!

பாரத நாட்டின் மக்களே!... உங்களுக்கெல்லாம் இந்த மாடுகளைப் பரிசளிக்க நான் மிக மிக மகிழ்ச்சி அடைகிறேன்! அதே நேரத்திலே ஓர் மாபெரும் உண்மையை உங்களிடம்உரைத்திட விரும்புகிறேன். மாடுகளை நான் என் சொந்தப் பணத்திலே வாங்கிக்கொடுக்கவில்லை! இதை வடக்கே உள்ள - டெல்லியில் உள்ள-நேரு சர்க்கார் தருகிறது! எனவே நீங்கள் இந்த வடக்கு-தெற்கு கூச்சலுக்கு செவிமடுக்காதீர்! பொதுமக்களே! நீங்கள் சென்ற தேர்தலிலே மாட்டுப் பெட்டிக்கு வோட்டு போட்டீர்கள். இதிலிருந்து மாட்டை நீங்கள் என்றுமே மறப்பதில்லையென்பதை உலகம் நன்கு அறியும்! இந்த மாடுகளை-நேரு சர்க்கார் கொடுத்த இந்த மாடுகளை நீங்கள் சாகிற வரைக்கும் மறக்கக்கூடாது!...ஆனல் இந்தமாடுகளைப் பார்க்கும்பொழுதெல்லாம் மாட்டுப்பெட்டியை மறக்கக்கூடாது......

கூட்டத்தில் ஒருவர் எழுந்திருந்து: டெல்லி சர்க்கார் கொடுப்பதாகக் கூறினீர்களே! அந்தப் பணம் அவர்களுக்கு எப்படி வந்தது?...

கூட்டத்திலிருந்த சிலர், "உஷ்!...உஷ்!...உட்காரய்யா! மந்திரியையே இவர் கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டார்..." அதற்குள்போலீஸ்காரர் அவரை உட்கார வைக்க முயலுகிருர்.

இதைப் பார்த்த மந்திரியார் சமாளித்துக்கொண்டு,

"நேரு சர்க்காருக்குக் கிடைக்கும் பணமும் மக்களின் பணந்தான். ஆனல் அதை அவர்கள் நமக்கு இதுபோன்ற தானமாகக் கொடுப்பதை நாம் பாராட்ட வேண்டும்..."

கூட்டத்திலிருந்த மற்றவர்: "பாராட்டத்தான் வேண்டும்! மக்கள் பணத்தை விழுங்கி ஏப்பம் விடாமல், இப்படியாவது கொடுக்கிருர்களே!... பாதிப் பணத்தை ஏப்பம் விட்டுவிட்டு பாதி பணத்தில் தங்கள் சம்பளமாகவும், ஆட்சி நடத்துவதற்கான செலவாகவும் செலவிட்டதுபோக மீதியுள்ள விசம் பங்கிற்கு மாடுகள் வாங்கி தானம் செய்வதற்கு பாராட்டத்தான் வேண்டும்!..."

மந்திரி: குறுக்கே இப்படி முணு முணுத்தால் நான் எப்படிப் பேசுவது? குறையிருந்தால் எழுந்து பேசலாம்!

ஒருவர் (எழுந்திருந்து) கனம் மந்திரி அவர்களே! சீட்டுக் குலுக்கிப் போட்டு எந்தக் கிராமத்துக்கு மாடுகள் தானம் கொடுக்கலாமெனத் தீர்மானித்தார்கள்; அதிலே எங்கள் கிராமத்தின் பெயரே விட்டுப் போய் விட்டது!...

மந்திரி: சரி!...நான் அதிகாரிகளைக் கவனிக்கச் சொல்கிறேன். மந்திரிக்கு வேண்டியவனுக்குக் கொடுத்துவிட்டானென்று கூறுவீர்களென்றுதான் சீட்டுக் குலுக்கிப் போட்டு கொடுக்கிருேம்!...

ஒருவர்: நல்லா சீட்டு குலுக்கிப் போட்டீங்க! ஏழைகளுக்கு மாடு தானம் கிடைக்கவில்லை! மாடு வைத்துள்ள பணக்காரர்களுக்குக் கிடைக்கிறது! யார் மிகவும் ஏழையென்று பார்த்து கொடுப்பதில்லையா? திருவுளச் சீட்டு முறை பணக்காரர்களுக்கே நன்மை செய்வதும் காங்கிரசாட்சியின் மகிமையோ? மாயமோ?... (இவர் கூறியதை மந்திரியார் கவனிக்கவில்லை. அவர் பேசிக்கொண்டே போகிருர்.)

மந்திரி: எனவே! மக்களே! **மாட்டுப் பொங்கல் திருநாளிலே மட்டுமன்றி மற்றெல்லா நாட்டு மக்களிலும் மாடுகள் தானம் கொடுத்த மந்திரியையும், மத்ய சர்க்காரையும் மாட்டுப் பெட்டியையும் மறவாதீர்!**

வருகிறேன் வணக்கம்!...ஜே ஹிந்த்!...

★

மந்திரி மனைவி: அட! என்னங்க இப்படி சோர்ந்து போய் உட்கார்ந்துவிட்டீர்களே!...உங்களுக்கென்ன கவலை?

மந்திரி: அட! நீ வேறு என்னைத் தனிமையில் சிறிது நேரம் விடமாட்டாய் போலிருக்கிறதே!...இந்தக் காங்கிரசு அடுத்தத் தேர்தலிலே படுத்துவிடும்போலிருக்கிறதே! நான் ஒவ்வொரு ஊரிலேயும் போய், மாடுகள் தானம் கொடுத்து "மாட்டுப்பெட்டியைமறவாதீர்!" எனப் பிரச்சாரம் செய்தும், நேற்றுப் பொங்களுக்கு பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டனராம்!......ஐந்து இலட்சம் மக்கள் கூடியிருந்தனராம். தி. மு. க. அண்ணு "எழுந்திருங்கள்" என்ருராம்; எல்லோரும் எழுந்திருந்தார்களாம்! "உட்காருங்கள்!" என்ருராம் எல்லோரும் உட்கார்ந்தார்களாம்! ஐந்து இலட்சம் மக்களுக்குமேல் அண்ணுத்துரைக் கட்டளைக்குக் கீழ்படிந்துகடற்கரையிலே'டிரில்' பழகினுர்களென்ருல்....மாட்டுப் பெட்டிக்கு ஆபத்துதானே!

மனைவி: ஆமா உங்களுக்கு எப்பொழுதும் இந்த சந்தேகம் தான்! அதெல்லாம் காமராசர் அடுத்தத் தேர்தலுக்குள் சமாளித்துவிடுவார்!

மந்திரி: மக்களை ஏமாற்றுவது இனி அவ்வளவு எளிதல்ல மரகதம்!

மனைவி: ஆமா!... அதற்காக இப்பொழுதே கவலைப்பட்டு என்ன செய்வது? ஒழுங்காக இனிமேலாவது ஆட்சி செய்யுங்க! போலீஸ்காரர்களை விட்டுக் கொலை பாதகங்களைச் செய்துவிட்டு இங்கு கவலையோடு உட்கார்ந்துவிட்டால் போதுமா?..."**இதுவரை எந்த அடக்குமுறையும், எந்த விடுதலை இயக்கத்தையும் அடக்க முடிந்ததில்லை... சுதந்திர இந்தியா அடக்குமுறையை எந்த ஒரு இடத்திலேனும் நடப்பதைச் சகித்துக்கொண்டிராது!**" என்ற காந்தியாரின் பொன் மொழிகளைப படித்து இனிமேலாவது ஒழுங்காக நடக்க முயற்சி செய்யுங்கள்! அதை விட்டுவிட்டு துப்பாக்கி முனையிலே தி. மு. க. வினரை அடக்கி ஆட்சி புரிய நினைத்தால், இனிமேல் எந்தத் தந்திரத்தாலும் மக்களை ஏமாற்ற முடியாதுதான்! அது சரி, மாட்டுப் பொங்கலும் அதுவுமா இப்படி 'இடித்த புளி' மாதிரி அசையாமல் உட்கார்ந்திருந்தால்?... குளித்து முழுகிவிட்டு வந்து சாம்பிராணி போடுங்க!

மந்திரி: நீதானே போய் போடு!...நீயே தி. மு. க. மாதிரி புத்திமதி கூற ஆரம்பித்துவிட்டாய்! இங்கே வீட்டிலே அடங்கி கிடக்கும் உனக்கே இவ்வளவு அரசியல் அறிவு உண்டாகியிருந்தால், வெளியிலே பலப்பல சொற்பொழிவு கேட்கும் மக்களைப்பற்றி கேட்க வேண்டியதில்லை!

மனைவி: குறும்புப் பேச்சு போதும்! சாம்பிராணி போட வருகிறீர்களா இல்லையா?... இராகுகாலம் வரப் போகிறது!

மந்திரி; நானும் தி. கவில் சேரப் போகிறேன்! இனிமேல் சாம்பிராணி கிம்பிராணியென்று என்னிடம் பேசக்கூடாது!

மனைவி: ஓகோ! தி. மு. க, தி. க.வில் சேந்தால் மந்திரி பதவி காற்றிலே போய்விடும்!... நீங்க சாம்பிராணி போட வர மாட்டீங்களே!...

மந்திரி: முடியாது! முடியாது! முடியாது!

மனைவி: நீங்க வந்துமாட்டுப் பொங்கலுக்கு சாம்பிராணி போடலேன்னு அடுத்த தேர்தலிலே, நீங்க நிற்கப் போகும் தொகுதியிலே...மாட்டுப் பெட்டியிலே மண்தான் விழும்!... ஆமா! பசுமாடு, காளை மாட்டு மேலே ஆணை!

மந்திரி: தூ! தூ!... விட்டேன்னு சொல்லு! வாயை மூடு மரகதம்! நல்ல நாளும் பெரிய நாளுமா என்ன வார்த்தை கூறிவிட்டாய்! அபசகுனம்! அபசகுனம்! ஒரு விநாடியில் குளித்துவிட்டு, விபூதி பூசிக்கொண்டு ஓடோடி வருகிறேன்!

நம்ம மாட்டுத்தொழுவத்திலே நமக்கு மந்திரி பதவி வாங்கித் தந்த அந்த **மாட்டுப் பெட்டிகளிலே** இரண்டை எடுத்து, மலர் மாலை சூட்டி, சந்தனம் குங்குமம் இட்டு, மாடுகளோடு மாடுகளாக அவைகளையும் வை!... சாம்பிராணி போட்டு, கடவுளைக் கும்பிட்டாலாவது அடுத்தத் தேர்தலிலே மாட்டுப் பெட்டி ஜெயித்து, என் மந்திரி பதவியும் நிலைக்காதா?...

(அப்பொழுது மந்திரியின் மனைவி 'அஸ்க்!' எனத் தும்முகிருள்!...)

★

வெண்பாப் போட்டி-10.

ஈற்றடி:

மேயப் புகுந்த விதம்.

முடிவு தேதி 8-2-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

கேள்விப் பெட்டி

பன்மொழிப்புலவர் பதில் தருகிருர்

எஸ். முத்துசாமி. திருப்பதி.

1. பச்சைத் தமிழர் காமராசர் தமிழ்நாட்டில் இந்தி படிக்க சொல்லி வருகிருரே ஏன்?

2. தேர்தல் சமயம் காமராசர் சென்னைக்கு தமிழ்நாடு என்று பெயர் வைப்பதாக சொன்னுரே இப்போது ஏன் அதைப்பற்றி கவனிப்பதில்லை.

1. 'இந்தி' நாட்டாருக்கு அடிமைப்பட்டிருப்பதால்.

2. தில்லித் தெய்வதங்கள் 'தமிழ்நாடு' 'கன்னட நாடு' என்ற இரண்டு நாட்டுப் பெயர்களையும் விரும்பவில்லை. இரண்டிலும் திராவிட இன உணர்ச்சி மொழியுணர்ச்சி பரவியோடத் தொடங்கிவிட்டது. அம்மொழிகளின் பெயர்களே உலகெங்கும் எட்டிவிடக்கூடாதே என்று தில்லி அலமருகிறது.

பி. எஸ். பி. பாண்டியன்,
சென்னை-21.

3. தமிழ் வருடங்களின் பெயர்கள் அறுபதும் தமிழ்ப் பெயர்களாக இல்லையே காரணம் என்ன? இப்பெயர்கள் எம்மொழியைச் சார்ந்தவை?

3. தமிழர்களிடையில் அரசர் ஆட்சி ஆண்டுகள்தான் முன்னுளில் பெரு வழக்காயிருந்தது. சிலவகை ஆண்டு வட்டங்கள் இருந்ததாகவும் அறிகிருேம். ஆனுல் அறுபதாம் ஆண்டு வட்டமோ அதற்குரிய பெயர்களோ பழமையானவையாகத் தெரிய வரவில்லை. தமிழகத்திலுள்ள வைதிகத் திருமணம், சாதி முறை, கோயிலில் வேதபாராயணம், சமஸ்கிருத மந்திரங்கள் ஆகிய பல புதிய வழக்கங்களுக்குக் காரணமான இயக்கம் 16-ம் நூற்ருண்டிலெழுந்து 200 ஆண்டுகளுக்கு மேலாக நிலை வந்துள்ள வைதிக இயக்கமே. இன்றைய தமிழ்ப் பஞ்சாங்கமும் அறுபதாண்டு வட்டமுறையும் பெயர்களும் அக்காலத்துக்குரிய வையோ என்று கருத இடமுண்டு. ஏனெனில் வைதிக இயக்கத்தின் மூலதனமாகிய தெலுங்கு நாட்டிலிருந்துதான் தமிழக நீங்கலாக இந்தியா முழுவதும் இன்று வழங்கும் புத்தம் புதுவகைப் பஞ்சாங்கம் (வாக்கிய பஞ்சாஙகம்) பரவியுள்ளது. தமிழகத்தில் இன்னும் அது புகுந்து பெரு வழக்காகவில்லை. வைதிக இயக்கத் தொடக்க காலத்திய முறையே இன்னும் நீடிக்கிறது.

உ. நடராசன்,
அழகியபாண்டியபுரம்.

(அ) சங்க இலக்கியங்களான "பத்துப்பாட்டு" "எட்டுத் தொகை" "பதினெண் கீழ் கணக்கு" முதலியவற்றில் உள்ள நூல்களைப் பாடிய புலவர்கள் யார்? தொகுத்தவர்கள் யார்? உரை எழுதியவர்கள் யார்? பாடப்பெற்ற மன்னர்கள் அல்லது வள்ளல்கள் யார்? நூல் "யாப்பில்" எந்த வகைப் படும்? நூல் யாத்த புலவர்கள் வாழ்ந்த காலம் யாது?

(ஆ) "இராமாயணக்" கதை "ஹோமர்" இயற்றிய 'இலியட்" (Iliad) "ஒழிசி" (Odyssey) யிலும் "தாந்தே" இயற்றிய Infermo XXVI விலும் காணப்படுகிறது. "ஆரியர்களின் பூர்வீக பொதுக் கதையால் 'இராமாயணம்' இருந்திருக்கலாம்! நாடு விட்டு நாடு சென்ற ஆரியர்கள் தத்தம் மொழியிலே அக்கதையை சுருக்கியும் திரித்தும் எழுதியிருக்கலாம்! வடஇந்திய 'ஆரியர்கள்' 'திராவிடர்கள்' மேல் பழி சுமத்த வேண்டி 'அரக்கர்' என்ற பட்டத்தை 'திராவிடர்கள்' மேல் ஏற்றி 'இராமாயணம்' இயற்றினர்' என்ற கூற்று சரியா?

(இ) "வால்மீகி இராமாயண"த்தில் பாண்டியர்களின் மறைந்த தலைநகரான 'கபாடபுரத்தைப்' பற்றி பேசப்படுகிறது. "கபாடபுரம்" இன்றுள்ள குமரிமுனைக்கு அப்பால் இருந்ததாகவும் இரண்டாவது கடற்கோளில் மறைந்ததாகவும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அரக்கர் தலைவன் 'இராவணன்' ஆண்ட 'இலங்கைத்தீவு,' கபாடபுரத்திற்கு அப்பாலே இருந்திருத்தல் வேண்டும். அப்படியானுல் கடல் கோளினுல் மறைக்கப்படாத 'இலங்கைத்தீவு' ஒன்று கபாடபுரததிற்கு அப்பால் இருந்திருக்கிறதா?

கபாடபுரத்திற்கு அப்பால் அன்று தீவு ஒன்றும் இருந்திருக்க முடியாது. வால்மீகியின் கூற்று நம்பத்தகுந்தது' அல்ல என்ற கூற்று சரியா?

(அ) பத்துப் பாட்டு என்பதுதிருமுருகாற்றுப்படை, பெருங்நூற்றுப் படை, சிறுபாணுற்றுப்படை, பெரும் மாணுற்றுப்படை, மதுரைக்காஞ்சி, நெடுநல்லாடை, குறிஞ்சிப் பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. திருமுருகாற்றுப்படையும் நெடுநல்வாடையும் பாடியவர் நக்கீரர். பெருந்நூற்றுப்படை முடத்தாமக்கண்ணியாராலும், சிறுபாணுற்றுப்படை இடைக் கழிநாட்டுநல்லூர் நத்தத்தனுராலும் பெரும்பாணுற்றுப்படையும் பட்டினப்பாலையும் கடியனூர் உருத்திரங் கண்ணனுராலும், மதுரைக்காஞ்சி மால்குடி மருதனுராலும், குறிஞ்சிப் பாட்டுக் கபிலராலும், முல்லைப் பாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனுர்மகளுர் நப்பூதனுராலும், மலைபடுகடாம் இரணிய முட்டத்துப் பெருங்சன்னூர்ப் பெருங் கௌசிகனுராலும் பாடப்பட்டன.

பத்துப் பாட்டுக்குத் தொகுத்தவர் தொகுப்பித்தவர் கிடையாது ஏனெனில் அவை தொகை நூல்கள் அல்ல. ஆயினும் பத்தும் ஒன்ருக்கியதாயின் என்பது தெரியப்படவில்லை.

எட்டுத் தொகை என்பன அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல் ஆகியவை.

இவற்றுள் நெடுந்தொகை எனப்படும் அகநானூற்றைத் தொகுப்பித்தவர் பாண்டியன் உக்கிரப் பெருபகுதி. தொகுத்தவர் மதுரை உப்பூரிகிழான் மகனுர் உருத்திரசன்மனுர். பாடியவர் 145 புலவர்கள்.

ஐங்குறுநூறு தொகுப்பித்தவர் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை. தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். பாடியவர் மருதத்துக்கு ஓரம்போகியார்; நெய்தலுக்கு அம்மூவனுர், குறிஞ்சிக்குக் கபிலர், பாலைக்கு தெலாந்தையார், முல்லைக்குப் பேயனுர் ஆவர்.

கலித் தொகைக்குத் தொகுப்பித்தவர் அறியப்படவில்லை. தொகுத்தவர் ஆசிரியர் நல்லந்துவனுர். பாடியவர் பாலைக்குப் பெருங்கடுங்கோன், குறிஞ்சிக்குக் கபிலர், மருதத்துக்கு மருதனின்நாகனுர், முல்லைக்குச் சோழன்நல்விருத்திரனுர், நெய்தலுக்குத் தொகுத்தவராகிய நல்லந்துவனுர் என்று ஒரு தனிப் பாடல் கூறுகிறது.

குறுந்தொகைக்குத் தொகுப்பித்தவர் பெயர் தெரிய வரவில்லை. தொகுத்தார்பூரிக்கோ பாடியவர் 205 புலவர்கள்.

நற்றிணை தொகுப்பித்தார் பன்னுடு தந்த பாண்டியன் மாறன் வழுதி. தொகுத்தவர் பெயர் தெரியவில்லை. பாடிய புலவர் பலர்.

புறநானூறு தொகுப்பித்தார், தொகுத்தார் பெயர் தெரியவில்லை. பாடியவர்கள் 147-க்குமேற்பட்ட புலவர்கள்.

பதிற்றுப்பத்து தொகுப்பித்தார்- தொகுத்தார் பெயர்கள் தெரிய வரவில்லை முன்னதில்கடவுள்வாழ்த்து என்று கருதப்படும் பாடலும் எட்டு பத்துக்களும்தான் கிட்டியுள்ளன. 2 முதல் 9-வரையுள்ள இந்த எட்டும் பத்துக்களைப் பாடிய புலவர்கள் குமட்டூர்க் கண்ணனுர், பாலைக் கௌதமனுர், காப்பியாற்றுக் காப்பியனுர், பரணர், காக்கைபாடினியார் நச்செள்ளையார், கபிலர், அரிசில் கிழார், பெருங்குன்னூர்கிழார் ஆகியோர், பரிபாடலில் 70 பாட்டுக்களில் கிடைத்துள்ளவை 33. ஆசிரியர் பெயர் அறியப்படாத 13 பாடல்கள் போக, மீந்த 20 பாடல்கள் 13 புலவர்களால் பாடப்பட்டுள்ளன.

பதினென் கீழ்க்கணக்கு என்பது திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னுநாற்பது இனியவை நாற்பது, கார்நாற்பது, களிவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, மற்றும் ஏதோ ஒரு நூல் ஆகியவை. இவற்றுள் திருக்குறள் திருவள்ளுராலும் நாலடியார் நானூறும் நானூறு சமண முனிவராலும் இயற்றப்பட்டவை. திணைபாலை 150-ம் ஏலாதியும் கணிமேதாவியராலும், இன்றநாற்பது கபிலராலும் இனியது நாற்பது மதுரைப்பூதஞ் சேந்தனுராலும், களவழி பொய்கையாராலும், ஐந்திணை ஐம்பதுமாறன் பொறையனுராலும், ஐந்திணை எழுபது மூவாதியராலும், திணைமொழி ஐம்பது கண்ணன் சேந்தனுராலும், திரிகடுகம் நல்லாதனுராலும், ஆசாரக்கோவை பெருவாயின் முள்ளியாராலும், பழமொழி நானூறு முன்னுறைய யைதனுராலும், முதுமொழிக் காஞ்சி மதுரைக் கூடலூர் கிழாராலும், சிறு பஞ்சமூலம் காரியாசானுலும் இயற்றப்பட்டன.

யாப்பு முறையில் பத்து பாட்டு, எட்டுத் தொகை முழுவதிலும் கலிப்பாவாலான நீங்கலாகப் பெரும்பாலும் ஆசிரியராலே பதினென் கீழ்க்கணக்கில் பெரும்பாலும் வெண்பா. திருக்குறள் குறள் வெண்பா. முதுமொழிக்காஞ்சி குறள் தாழிசை.

கி. ஆழ்வார்-தூத்துக்குடி,

ERA என்ற ஆங்கிலச் சொல்லின் பொருளைத் தரக்கூடிய சொல் தமிழில் உண்டா? உண்டெனில் அது எத்தமிழ் நூலில் காணப்படுகிறது?

இல்லையெனின் அச்சொல்லை எங்ஙனம் உருவாக்க இயலும்?

'ஊழி' என்ற சொல் அப்பொருளையும் குறிப்பதே. மதுரைத் தமிழ்ப் பேரகராதியில் 'நெடுங்காலம்', 'யுடம்', 'வாழ்நாள்', 'முறையை' முதலிய பொருள்கள் தரப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில்

'ஊழி உய்க்கும் பேருதவி
ஒழியாய் வாழி காவேரி!'

என்ற இடத்தில் மாறுதலுக்குரிய (பிரளய கால) பெரு வெள்ளக் காலம் என்றும் பொருளில் வந்துள்ளது.

'அப்தம்' என்பது இதற்குச் சரியான சமஸ்கிருதச் சொல, அதுவும் சில சமயம் ஒரு அப்தத்தின் பெயராகிய சக அப்தம் (சகாப்தம்) என்ற சொல்லும் இம்முறையில் ஆங்கிலச் சொல்லின் பொருளில் வழங்குகிறது. ஆகவே 'ஊழி' என்ற சொல் இவ்வகையில் பொருத்தமானது.

கல்வெட்டுக்கள் அரசன் ஆட்சி ஏற்ற ஆண்டிலிருந்து கணக்கிட்ட ஊழிகளை மன்னன் ஆண்டு என்று மட்டுமே குறித்தனர். ஆனு 'ஊழி' வாழ்நாள் என்ற பொருளை உடையதாதலின் அதுவும் மன்ன ஆட்சி ஊழிகளையாகும்.

— 6-ம் பக்கத் தொடர்ச்சி —

கள். வேள்நாட்டார் என்ன, தன் மானம் இழந்தவர்களா? இல்லை தன்னாட்டின்மீது பற்றற்றவர்களா? இல்லை உரிமையை அடகுவைத்து உல்லாசபுரியில் வாழ நினைக்கும் உன் மத்தர்களா? நீங்கள் என்னைத் துண்டுதுண்டாக வெட்டுவதாக இருந்தாலும் சரி; என் தந்தை மாலரையரைப் பற்றி எதுவும் தெரிந்துகொள்ள முடியாது". என்றாள் வல்லபி. வல்லபியின் வார்த்தைகள் நரலோக வீரனின் செவிகளில் நங்கூரம் பாய்ச்சியதுபோலிருந்தது. கோபத்தால் கண்கள் கோவைப்பழம்போல் சிவந்துவிட்டன. தந்தையின் அருகிலிருந்த சூரைநாயகனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. எதிர்காலத்தைப் பற்றிய தன் எண்ணங்கள் சிதறுண்டுவிடுமோ? என்ற பயம் சூரைநாயகனுக்குஏற்பட்டது. வல்லபி தப்பித்துச் சென்றாலும் சென்றுவிடுவாள்; கவனித்துக் கொள்ளுங்கள் என்று தன் படைவீரர்களுக்கு கட்டளையிட்டுவிட்டு தன் இருப்பிடத்திற்கு சென்றுவிட்டான் நரலோக வீரன். அவ்விடத்திலேயே அசையாமல் நின்று கொண்டிருந்த சூரைநாயகன்மீது தன் அன்புப் பார்வையை அள்ளி வீசி; முத்துப்பல் காட்டி, மோகனப் புன்னகை புரிந்தவளை படைவீரர் அழைத்துச்சென்றனர். சூரைநாயகனும் தன் தந்தையிருக்கும் இருப்பிடத்திற்குப் புறப்பட்டான். கதிரவனும் தன் கடமையை முடித்துக் கொண்டான்.

வண்ணநிலவு வானத்தில் வட்டமிட்டுக்கொண்டிருந்தது. வட்டமதியைத் தொட்டணைக்கவேண்டுமே என்ற எண்ணம் அல்லிக்கு. கதிரவன் சென்றுவிட்டானே, என்ற கவலை தாமரைக்கு. வல்லபியைக் காணத் துடித்தான் சூரைநாயகன். மாலரையனைப் பற்றிய செய்தி கிட்டவில்லையே; என்ற கவலை நரலோக வீரனுக்கு. இந்நிலையில் இருவருக்குமே, உறக்கமில்லை. நள்ளிரவு நேரம்; நரலோகவீரன் கூடாரத்தைவிட்டு வெளியே சென்றான் இதனைக்கண்ணுற்ற சூரைநாயகன்; சந்தேகம் கொண்டான் தன் தந்தை வல்லபியைக் கொன்றுவிடுவாரோ? என்ற சந்தேகம் மேலிட்டதால்; சற்றுநேரம் பொருத்து வல்லபியைக் கட்டிவைத்திருக்கும் கூடாரத்தை நோக்கி, அடிமேல்அடி வைத்து பூனைபோல் மெதுவாகச் சென்றான் சூரைநாயகன். ஆனால், சூரைநாயகன் எண்ணியதுபோல் அங்கு நடப்பதற்கு அறிகுறியே இல்லை. தன் தந்தை நரலோக வீரனையும் அங்கு காணவில்லை; என்றறிந்த சூரைநாயகன் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளத் ...டம் தீட்டினான் வல்லபியைக் ...வல் புரிந்த காவலர் அனைவரும் ...ரையிலாழ்ந்திருந்தனர். ஆனால் ...பி மட்டும் ஏதோ ஆழ்ந்த சிந்...யிலிருப்பவள்போல் காணப்பட்டாள். வல்லபியைச் சந்தித்துப் பேச தக்க தருணமென வெண்ணிய சூரைநாயகன்; மெதுவாகக் கூடாரத்தினுள் நுழைந்தான். நட்ட நடு நிசியில் தன்னைத் தேடி வந்த சூரைநாயகனைக் கண்டதும்; கதிரவனைக் கண்ட கமலத்தைப்போல், வல்லபியின் முகம் மலர்ந்தது. காதோடு காதாக ஏதோ பேசினர்கள் வல்லபியும்; சூரைநாயகனும். மறுகணமே; கூடாரத்திற்கு வெளியில் காவல் புரியும் படைவீரர்களுக்குத் தெரியாமல் இருவரும் வெளியேறிவிட்டனர். வல்லபியோடு தனித்துப் பேசுவதற்கு தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணிய சூரைநாயகன் உள்ளம்; ஆனந்தத்தால் பொங்கியது. பால் நிலவொளியிலே பருவத்தால் பாதிக்கப்பட்ட காதலர்களின் சந்திப்பு அவர்களுக்கு எத்தகைய நன்மை பயக்கும் என்பது அவர்களுக்கல்லவா தெரியும். "வல்லபி நீ உன் தந்தையிருக்கும் இடத்தைச் சொல்லிவிடுவது தானே; ஏன் இந்தச் சிரமம்" என்று தன்பேச்சை ஆரம்பித்தான் சூரை நாயகன். மௌனம் சாதித்தாள் வல்லபி. பெண்ணல்லவா? வெட்கம், அவள் நாவை அடக்கி விட்டது என்று எண்ணிய சூரை நாயகன்; "வல்லபி என் தந்தை உன்னைக் கொன்றாலும் கொன்று விடுவார் அதன் பின் நான் எப்படி நீயின்றி உயிர் வாழமுடியும் என்னுயிரைக் காக்க வேண்டியாவது நீ உண்மையைச் சொல்லிவிடு" என்று அன்புடனுரைத்தான் வல்லபியை நோக்கி. வீராங்கனையல்லவா வல்லபி? வீறுகொண்டெழுந்தாள். "அன்பரே! என் தந்தையின் உயிரையோ; அல்லது என் உயிரையோ, நான் பெரிதென எண்ணவில்லை. ஆனால், தன்னாட்டைப் பொன்னாடாக்கி தன்மானத்தோடு; சுதந்திரமாக வாழவேண்டும் என்ற மேன்மையான எண்ணங் கொண்ட ஒரு மனிதப் பண்பு கொண்டவரை நான் எப்படிக் காட்டிக் கொடுக்கமுடியும்" என்றாள் வல்லபி. "இப்பொழுதென்ன நீங்கள் சுதந்திரத்தோடு தானே வாழ்கின்றீர்கள். சோழ மன்னனால் உங்களுக்கு தீங்கொன்றுமில்லையே?" என்றான் சூரைநாயகன். "அன்பரே! வேள் நாடு சுதந்திரமாக வாழ்கின்றதென்றால், சோழ நாட்டுக்குத் திரை கொடுக்க வேண்டியதில்லையே? உங்களுக்கு நன்கு தெரிந்திருக்கலாமே; வேள்நாடு சோழ நாட்டிற்கு அடிமையென்று. எங்கள் நாட்டில் விளையும் பொன்னும்; பொருளும்; திரையாக உங்கள் நாட்டுக்குக் கொடுப்பதில் எங்களுக்கு என்ன லாபம்? உங்கள் நாடுதானே வளமடைகின்றது. தங்களுக்காக நான் உயிர் வாழ வேண்டுமென்றாலும்; எங்கள் நாடு என்றும் தனி நாடாக வாழ வேண்டும் என்ற எண்ணங்கொண்டவள் நான்" என்றாள் வல்லபி. "வல்லபி! உனக்கு இருக்கும்; பண்பு; கடமை; வீரம்; இவையனைத்தும் இந்நாட்டு ஆண்மக்கள் அனைவருக்கும் இருந்தால் ......என்று தன்பேச்சை நிறுத்திக்கொண்ட சூரைநாயகன். வல்லபியைத் தன் மார்பிலே சேர்த்து அணைத்துக் கொண்டு; "வல்லபி! பெற்றால் உனையே மனைவியாகப் பெறுவேன் இல்லையேல் நான் யாரையும் மணம் புரிவதில்லை. நடப்பது நடக்கட்டும். நமது சந்திப்பு இதுவே முதல் சந்திப்பானாலும்; அல்லது கடைசி சந்திப்பானாலும்; கவலையில்லை. நீ இப்பொழுதே தப்பித்துச் சென்றுவிடு, என்றாவது ஓர்நாள் மீண்டும் சந்திப்போம்" என்றான் சூரை நாயகன். "சோழநாட்டு நரலோக வீரனின் மைந்தனா இப்படிப் பேசுவது? கோழைத்தனம். வேள்நாட்டாள் தப்பிச் சென்றாள் என்று நாளை சரித்திரம் தூற்றுமே. தூய எண்ணங்களோடு. வீரமும், தங்கள் உள்ளத்திலே தோன்றட்டும்; நான் இருந்தாலும் அல்லது இறந்தாலும் கவலையில்லை" என்று வீரமாகப் பேசினாள் வல்லபி.



கூடாரத்தை விட்டு வெளியேறியநரலோகவீரன்; மறுபடி தன் கூடாரத்தினுள் நுழைந்தபோது; சூரைநாயகன் அங்கு இல்லாமலிருப்பதைக் கண்டவுடன்; வல்லபியை வைத்திருக்கும் கூடாரத்தை நோக்கி தன் நடையைக் கட்டினான். அங்கு சென்று பார்த்ததில், வல்லபியையும் காணவில்லை. நரலோக வீரனின் மனம் உலகத்தையே ஒரு முறை வட்டமிட்டிருக்கும்; கோபத்தால் கொந்தளித்த நரலோகன் "எங்கே வலலபியைக் காணவில்லை" என்று தன் படைவீரர்களிடம் மிகுந்த ஆவேசத்துடன் கேட்டான். பதில் கூற முடியவில்லை படைவீரர்களால் மூலைக்கொருவராக ஓடித் தேடினார்கள். பால்நிலவு பருவக்காதலர்களையென்று பார்க்கவில்லை. படைவீரர்களுக்கு காட்டிக்கொடுத்துவிட்டது. சூரைநாயகனும், வல்லபியும், கைது செய்யப்பட்டு; நரலோக வீரன்முன் நிறுத்தப்பட்டார்கள். நரலோகவீரனின் மனம், ஓர் நிலையில் நில்லாமல் தத்தளித்தது. சோழப் பேரரசைக் கவிழ்க்கத் திட்டங்கொண்ட வேள்நாட்டு விழி மங்கை வல்லபியோடு சோழநாட்டு நரலோகவீரன் மகன் கொஞ்சிக் கொண்டிருந்தான் என்ற செய்தி; குலோத்துங்க மன்னனின்செவிக்கு எட்டினால், முடிவு என்ன? என்பதைப்பற்றிய எண்ணமே நரலோக வீரனின் மனதைக் குழப்பியது. "சரி காலையில் பார்க்கலாம்" என்று தன் படைவீரர்களிடம் சொல்லிவிட்டு தன் இருப்பிடம் நோக்கிச் சென்றுவிட்டான். நரலோகவீரனின் சிந்தனைப்பறவை சிறகை விரித்துப் பறந்தாலும்; மைந்தனைப் பற்றிய நினைவே, நரலோக வீரன் மனதை விட்டு அகலவில்லை.

இளங்கதிர் பரப்பி, இன்முகத்தோடு கிளம்பிய கதிரவன்; வானத்திலே வட்டமிட்டுக் கொண்டிருந்தான். தன் படை வீரர்களை அழைத்து; சூரை நாயகனையும், வல்லபியும், அழைத்து வாருங்களெனக் கட்டளை யிட்டான். படைவீரர்கள் கட்டிளங் காதலர் களிருவரையும் அழைத்து வந்து நரலோக வீரன் முன் நிறுத்தினர். தந்தையின் முகம் கண்ட தனயன்; தன் தவருக்கு மன்னிப்புக் கோருவது போல தலைகுனிந்து நின்றான் வேள் நாட்டு வேல் விழிவல்லபி. சினம் கொண்ட சிங்கம் போல் நின்றாள்.

„வேள் நாட்டு வீராங்கனையே! நட்ட நடு நிசியில்; வட்ட நிலா வானத்தில் மிதக்க; தொட்டணைத்துச்சோரம்புரிய சோழநாட்டுவீரன் தானா உனக்குக் கிடைத்தான்" என்று கேலிப் புன்னகையோடு கேட்டான் வல்லபியை நோக்கி நரலோக வீரன். கோவை யிதள் துடிக்க; கோபத்தால் முகஞ்சிவக்க; கட்டவிழ்த்து விட்ட மதங்கொண்ட களிறு போன்று, சினம் பொங்கிய அந்தச் சிங்காரி; தன்னருகில் நின்ற தன்காதலன் சூரை நாயகன் உடைவாளை உருகி; தனக்கு நேராக அமர்ந் திருந்த நரலோக வீரனை நோக்கி வீசினாள். குறி தவறிவிட்டது கோமள வல்லியின் வாள். தப்பினான் நரலோகவீரன். ஆனால்; மறுகணமே, தன்னாட்டைப் பொன்னாடாக்க நினைத்த தையலின் மார்பிலோ பாய்ந்தது வேல். வாழ்வின் கடைசி நேரத்திலே; புன் முறுவல் பூத்த முகத் தோடு; தன்னருகிலிருந்த தன் காதலன் சூரை நாயகன் மீது சாய்ந்தாள் அந்த நேரத்திலே „என்னருமைத்தாயகமே என்றும் நீவாழ்க" என்று முணு முணுத்தது அவள் வாய். அமைதியை நிலை நாட்டி விட்டோம் என்ற எண்ணத் தோடு, புறப்பட ஆயத்தமானது சோழ நாட்டுப் படை. ஆனால்; சூரை நாயகன் உள்ளத்தில் அமைதியை ஏற்படுத்துவது யார்? முதற் குலோத்துங்கனது ஆட்சிக்குப் பிறகு விக்கிரம சோழன ஆட்சியில், சூரைநாயகன் ஓர் சிற்றசனாக மாறியபோது; அவன் மனம் அமைதி கொண்டிருக்குமோ? யார் கண்டது.

— முத்தூரான்.

தென்றல்

விலங்கிட்டு அடைத்தது குற்றமா?

விடுதலை செய்தது குற்றமா?

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

சினைக்காரர்கள் போன்று, நகரத்திற்கு ஒரு சோற்றுக் கடையைத் திறந்து வைத்து, வாய்க்கு ருசியான பண்டங்களை விற்பனை செய்வது அதிகப் பலனைத்தரும் என்ற கருத்துப்பட, சில நாட்களுக்குமுன்பு அமெரிக்காவைக் கேலி செய்யும் நோக்கத்துடன், ஓர் பத்திரிகை எழுதிற்று.

ஆடம்பர விளம்பரத்திலும், அச்சடித்த பத்திரிகைகளிலும் கோடி கோடியாகச் செலவிடும் அமெரிக்காவைப்போலவே, இந்தியாவும் காஷ்மீர்ப் பள்ளத்தாக்கின் ஆற்றுப் படுகைகளிலும் அரண்மனை வாசிகளுக்கும் செலவழிக்கும் பணத்தை, அங்கு விளையும் ஆப்பிள் பழத்தை மொத்தமாகக் கொள்முதல் செய்து கப்பலேற்றும் காரியத்திற்குப் பயன்படுத்தியிருந்தாலும், பாமர மக்களுக்கு நமது பணத்தின் மேன்மை இதற்குள் ஓரளவு புரிந்திருக்கலாம்.

எந்தப் பலனும் இல்லாமல் போனதுடன், அப்துல்லா போன்றவர்களை அனுவசியமாகத் தூக்கி வைத்தும் குப்புறக் கவிழ்த்தும் நாம் செய்த காரியத்தால் சொந்தப் பெயருக்கும் இது அப்துல்லாவின் உறுதியைக் காட்டுகிறது என்பது எவ்வளவு உண்மையோ அதே போல, இந்தியாவின் இராஜதந்திரக் குறைவையும் காட்டுகிறதென்பதை நாம் வெட்கத்துடன் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

படித்துப் பட்டம்பெற்ற-பரந்த உலகியலறிவு வாய்ந்த அரசியலில் ஊறித்திளைத்த-நுட்பமான சலவைகளிலும் கருப்பொருளைக் கண்டுபிடிக்கும் திறமை வாய்ந்த ஷேக் அப்துல்லாவுக்கே நாலரை ஆண்டுகளில் தன் மனத்தைமாற்றிக்கொள்ளும் அளவுக்கு அங்கு இந்தியாவின் தோழமைப் பிடிப்பும்-இந்தியா செலவழித்த பணத்தின் மதிப்பும் தெரியவில்லை என்றால், பாமர மக்களின் உள்ளத்தில், எதிர்பார்த்த ஆர்வம் கரை புரண்டு ஓடும் என்று எப்படிக் கருதமுடியும்? களங்கம் ஏற்படும்படி இந்தியா நடந்து கொண்டுவிட்டது.

'இந்திரன்' 'சந்திரன்' என்று போற்றித் துதி அகவல் பாடி அகில உலகத்துக்கும் அவன் தான் ஞான உபதேசி என்றும், மொத்த உலகத்தின் மூத்த அறிவாளி என்றும் புகழ்பாடி, தங்களுடைய கர்வத்தையும் அவன் காலடியில் காணிக்கையாகக் குவித்து வைப்பதுவும்,திடீரென ஓர் நாளில் அவனைப்போல் துரோகி-குடிகேடன், காட்டிக் கொடுக்கும் கயவன் உலகத்தின் சகாராப் பாலைவனத்திலும் இல்லை; அடர்ந்த ஆப்ரிக்கா காடுகளிலும் காணமுடியாது என்று தூக்கி எறிந்து பேசுவதும், கம்யூனிஸ்டுகள் உலகத்திற்குத்தான் இது வரையில் ஏகபோக உரிமையாக இருந்து வந்திருக்கிறது. இந்த ஒரு கெட்ட பழக்கத்தின் காரணமாகவே, மார்க்சின் கொள்கைக்கு மரண அடி கிடைத்த சம்பவங்களும் அநேகம். அனுதாபத்துடன் கம்யூனிசத் தத்துவங்களுக்குக் காது கொடுத்து கேட்டுக்கொண்டிருந்த, வெளி உலகத்தாருக்கு சமீபத்தில் ரஷ்யாவில் ஏற்பட்ட 'களை எடுப்பு'ப் பேரலைகள் துணிந்திறங்கினால் உயிருக்கு ஆபத்து என்று கருதக்கூடிய பிரமாண்ட வெள்ளமாகத் தெரியத் தொடங்கியதை நாம் கண்டோம்.

கம்யூனிஸ்டுகள், ஸ்டாலின் மீது வீசிய ஒவ்வோர் கண்டனக் குறிப்பும் ஓராயிரம் கம்யூனிச அனுதாபிகளை ஒதுக்கித் தள்ளிவிட்டது. அதே போன்றதுதான், பெரியா, மலங்கோவ், மாலடோவ் ஆகியோரின் விவகாரமும், கம்யூனிச உலகத்தை விசித்து அழும்படி வைத்து விட்டது!

இந்த அருவருப்பான நாடகக் காட்சியில் ஒன்றினை டெல்லியும் தடபுடலாக நடத்திக்காட்டியது. கம்யூனிசத்திற்கு ஏற்பட்ட இழுக்கும் பழிச்சொல்லைப் போலவே இந்தியாவின் தன் மதிப்புக்கும் பெருங்களங்கம் உண்டானது. இந்த நாடகக் காட்சியை நடித்துப் பார்த்தால் அமைதியாக ஓர் மூலையில் வாழ்ந்து வந்த அப்துல்லாவை இழுத்துப் பிடித்து, 'இவர்தான் மிகப் பெரிய தலைவர்' என்று அகில உலகத்துக்கும் டெல்லிதான் ஆரம்பப் பறை சாற்றிற்று. அப்துல்லாவைத் தவிர, அந்த இமயமலைக் கடவுளே வந்தாலும் காஷ்மீரத்தை கட்டிக் காத்து ஆளமுடியாது என்று, நேருதான் முழக்கமிட்டார். இந்தியத் துணைக் கண்டத்தின் தென் கோடிச் சென்னை நகரிலிருந்து வடகோடி ஸ்ரீநகர்வரை மிருகக் காட்சிசாலையின் மிக அற்புதப் பிராணியாக அவரை வலம் வர வைத்தார். மக்கள் எல்லோரும் பார்த்தனர். அவர் பேச்சைக் கேட்டனர்; ஆகா, இவரல்லவா, இமயப் பனியின் தூய்மையைப் பிரதிபலிப்பவர்: இவரால்தான் 'கிழக்குலகத்தின் ஸ்விட்சர்லாந்து' நமக்கு முழு உரிமையாகச் சாசனம் எழுதிக் கொடுக்கமுடியும் என்று வாய் பிளந்து அந்த உயர மனிதனை அண்ணாந்து பார்த்தோம்!

மக்கள் தங்கள் பிளந்த வாய்களை மூடா முன்னரே, டெல்லியின் கையைப் பிசைய வைத்து விட்டார், அப்துல்லா! சுருசுருப்பாக டெல்லி வேலை செய்தது. அப்துல்லாவைப் பிடித்து முடிற்று; அவர் இடத்தில் பக்ஷிகுலாம் சாயிபை அமர்த்திற்று. பக்ஷிதான் காஷ்மீரத்தின் உண்மையான புதல்வன்; இந்தியாவின் இணை பிரியாத தோழன் என்று பேசுகிறது.

அப்துல்லாவுக்குக் கொடுத்த விளம்பரத்திற்குச் சற்றும் குறையாமல், குலாம் சாயிபுக்கும் கொடுக்கிறது.

கதையின் முடிவு என்ன?

மங்களகரமான முடிவுதான் என்று "பிரசங்கிகள்" அவ்வப்போது தெரிவித்தாலும், சோகமயமான அத்தியாயங்களையே தொடர்ச்சியாகக் கேட்பதற்கு, 'காசு' கொடுக்கும் மக்கள் தயாராக இல்லை.

காஷ்மீர் எந்த வகையிலும் பாகிஸ்தானத்துக்குச் சொந்தமல்ல. இதனை இந்திய மக்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே ஒப்புக்கொண்டார்கள்; ஆனால், இந்தியாவுக்குச் சொந்தம் என்பதற்கு இதுவரையில் நாம் செய்திருக்கும் நிலையான ஏற்பாடுகள் என்ன?

நேரு கொடுக்கும் உறுதிமொழிகள் மட்டும் போதுமா?

பக்ஷி குலாம் சொல்லும் விஸ்வாச வார்த்தைகள் நம்பத்தகுந்தவைதானா? அன்றைய அப்துல்லாவை விடவா, இந்த பக்ஷி இந்தியாவுக்கு இதமான வார்த்தைகளாகப் பார்த்துப் பேசுகிறார்?

எதிர்கால நம்பிக்கைக்கான எவ்வித தடமும் காணோம்! கோடிக்கணக்கில் செலவிட்டும். வெளி நாடுகளில் கணிசமான அளவுக்குக் கெட்ட பெயர் எடுத்தும், கண்ட பலன் நின்ற நிலையில்தான் இருக்கிறது.

இந்த நிலையில்தான் அப்துல்லா, மீண்டும் மக்களைச் சந்திக்க வந்திருக்கிறார். அவருடைய உறுதியும், கொண்ட கொள்கையில் வழுவாத நிலைமையும், அவருக்கு மக்கள் அளிக்கும் ஆதரவின்பேரில்தான் நிலைக்கமுடியும். மக்கள் ஆதரவு அவருக்கு எவ்வளவு என்பதை இப்போது நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. போகப் போகத் தெரியும்.

ஆனால், அப்துல்லாவுக்குப் பின்னால் பொறுப்பேற்ற பக்ஷி குலாம் சாயிப்பும் அவரது சகாக்களும், இந்தியாவுக்கு பெருமையளிக்கும் வகையில் நிலைமையை வளர்க்கவில்லை என்பதை நியாயக் கண்ணோட்டத்துடன் நாம் ஒப்புக்கொண்டே ஆக வேண்டும்.

இந்தியாவுக்குச் சாதகமற்ற நிலை அங்கு நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து வரும் நிலையிலும், உதவி என்ற பேரால், இந்தியா கொடுத்து வரும் படாடோப தர்மத்தைக் குறைக்கவில்லை. 1952-ல் அப்துல்லா இந்தியாவுக்கெதிரான நடவடிக்கைகளில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருக்கிறார் என்று சொல்லப்பட்ட போதும், இந்தியா-தனது அரசியல் திட்ட விதிகளையும் தாண்டி 13 கோடி ரூபாயை முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்பகுதிப் பணமாகவும், $4\frac{1}{2}$ கோடிரூபாயை நல்ல பாதை வசதிகளுக்காகவும் காஷ்மீர் அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கிறதென்றால்,எந்த வித குறிக்கோளும் இல்லாமல் தான் இந்தியா காஷ்மீர் பிரச்னையைக் கையாளுகிறதென்று சொல்லலாமல்லவா?

என்னதான் நமக்கு முற்றிலும் உரிமையுடைய பிரதேசம் ஆனாலும், உலகத்தின் கண்களுக்கு தகராறுக்குரிய பிரச்னையாகி விட்டபின்பு, இவ்வளவு டம்பத்தனமாக காசை இறைக்கக் கூடாதல்லவா? அந்தை மகளை ஆனாலும், மனைவி என்ற பட்டப் பெயரை மற்றவர் எல்லோரும் மறுப்புக்கு இடமின்றி ஒப்புக் கொள்ள வேண்டுமே!

காஷ்மீர் விவகாரம் பெரிதாகி வளர்ந்து இந்தியா முழு மூச்சுடன் இராணுவ நடவடிக்கைகளில் இருந்தபோதே பிரசனையை வெகு சுலபமாக முடித்திருக்கக்கூடும். முடித்த முறை எத்தகையதானாலும், செலவிட்ட பணத்திற்கும் ஏற்பட்ட இராணுவ வீராகள் உயிரடிப்பிற்கும் ஓரளவு சமாதானத்தையாவது தேடிக்கொண்டிருக்கலாம். அந்தச் சந்தர்ப்பத்தை ஏனோ இந்தியா தவற விட்டுவிட்டது.

'எதிரி' நம் கைப்பிடியில் இருந்தபோது, வாக்கெடுப்பு நடத்தி பிரச்னையில் சுமுகமாக தீர்வு காணலாம் என்று 'பத்தினி' வேஷம் போட்டோம். அதற்குள் பிரச்னையில் ஏகப்பட்ட குளறுபடிகள் வந்து புகுந்து மேலும் முறுக்கேற்றி விட்டுவிட்டன. உடனே வாக்கெடுப்பு என்பது இந்தியாவின் தற்கொலைக்கு ஒப்பான அபாயகரமான செயல் என்று அடித்துப் பேச ஆரம்பித்தோம். திடீரென மாற்றிக் கொண்ட நமது எண்ணத்தை, பாகிஸ்தான் வெகு லாவகமாகப் பயன்படுத்திக் கொண்டது.

— அடுத்த பக்கம் —

அய்யா,

'பொங்கல் மலர்' சிறந்த கட்டுரைகளின் தொகுப்பாகும். திருப்பத் திருப்ப பல நடைகளில் படித்துச் சலிக்கும் தொல்லை இல்லை. விலை கொடுத்துவிட்டு நம் ஆளே சுரண்டுகிறான் என்று மனதிற்குள்ளே வேதனைப்படவில்லை. இரண்டு ரூபாய்க்கு நிறைவளித்தது, மலர். உங்கள் இலக்கியப் பணியைப் பாராட்டுகிறேன்.

மரகதம்,
சென்னை 6.

❁

அன்புடையீர்,

கமழ்குளிர் "தென்றல்" கை வந்து கிடைத்தது. ஆடற்கலைக்கு அழகு தேடப் பிறந்தவள், அட்டையில் ஆடி நிற்பது ஒரு எழிற் காட்சி! பன்மொழிப் புலவரின் தன்னிகரில்லாக் கட்டுரைக்கு முதலிடம் தந்தது முழுக்க முழுக்க ஏற்புடைத்து. மாணவன் குருவுக்குத் தரும் உயர்வு! "மு. வ"வும், "இராசமாணிக்கனாரும் தமிழனைக்குத் தொண்டாற்றவே தோன்றிவிட்டவர்கள்! வாழ்க அவர்கள்! வளர்க அவர்கள் தொண்டு!! "கவி பாடிப் பெருமை செய்யக் (வள்ளல்களை) கம்பனில்லை" என்று துதி பாடுவோருக்கு "கம்பன் இனித் தேவையே இல்லை"- "இதோ எங்கள் கவி முடியரசர் இருக்கிறார்" என்று வள்ளல் பரம்பரையினர் சவால் விட்டாலும் விடலாம்! "சூழ்ச்சிப் பள்ளம்"–இனியாவது நேர்மையால் நிரம்புமா என்று கேட்காமல் கேட்கிறார் ம. கி. த! புத்தர் கண்ட புது நெறி தெத்துவாயர்களுக்கும் ஒரு சிறு பகுத்தறிவுப் பொறி! "மறைந்த மாயம்"... நினைக்கவே அஞ்சுகிறது நெஞ்சம் இப்புதுச் செய்தி கேட்டு! "இருசும் இயக்கமும்" "அண்ணாவின் வண்ணப் படம்" இயக்கத்திற்கு ஒரு ஜீரணிக்கப்பட்ட வரலாறும்,-பாதுகாக்க வேண்டிய பொருளும் என்றுதான் சொல்லமுடியும். "பிரிவினையும்-ஒற்றுமையும்' உணர வேண்டியது அவர்கள் பொறுப்பு! அவ்வைத்தமிழரின் அந்தணர் விளக்கம், "அறியாத் தமிழனுக்கே" அர்ப்பணம். "பணம் பேசினால்" எங்கள் பொருளாதார மேதை இதோ எனக் காட்ட ஒரு வாய்ப்பு! பரந்தாமனாரும் சிதம்பரனாரும் தமிழ்த் தாயின் தரம் காக்கும் தகைமையாளர்கள் தானே! பாவாணரைப்பற்றி நாம் எழுதுவது நம் வீட்டுப் புலவருக்கு நாமே விருதளிப்பதாகிவிடும்! "கல்வித் துறைச் சிக்கல்கள்" கருத்துடன் ஆள வந்தார் உணர வேண்டிய ஒன்று. ஒரே குறை! ஆசிரியர் எழுதவில்லை.

அன்பன்
நெல்லை-சுப. சந்திரசேகரன்
சென்னை பல்கலைக்கழகம்

❁

'தென்றல்' ஆசிரியர் அவர்கட்கு வணக்கம். தென்றல் பொங்கல் மலரைப்பற்றி ஒரு சில.

1 முன்னைய ஆண்டுகளைவிட இப்பொங்கல் மலர் பல்லாற்றானும் சிறப்புடைத் தென்பதில் ஐயமில்லை.

2 ஒரு இலக்கியத் தொகுப்பாக மிளிர்கிறது. தமிழ் மணம் வீசுகிறது.

3 பொருளடக்கம் இருந்திருத்தல் வேண்டும். ஆசிரியரது ஒரு சிறு கட்டுரையோ, கவிதையோ, காணப்படாதது வருந்தத்தக்கது. காவியம் இருக்குமென மனம் மகிழ்ந்தோருக்கு அது தென்படவில்லை.

4 ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்களது கட்டுரை பரிமேலழகரது நரித்தன்மையை நன்கு காட்டுகிறது.

5 சூழ்ச்சிப்பள்ளம்- உருக்கமான வரலாற்று இணைப்புப் பூண்டது. கதைகளுக்கு முத்தாய்ப்பு கொடுக்கிறது.

6 முடியரசனின் கவிதை தமிழரின் செய்நன்றி மறவாத் தன்மையை நன்கு வெளிப்படுத்துகிறது.

7 கார்ட்டூன்கள் சேர்த்திருக்கலாம். புகைப்படங்கள்- ஓரங்க நாடகங்கள் இருந்திருக்கலாம்.

பெரியார் படம் இல்லாதது வருந்தத்தக்கது. இருசும் இயக்கமும் கட்டுரையில், கட்டுப்பாடாக ஈரோட்டு வாசனைப் படக்கூடாதென்றே அதன் ஆசிரியர் எழுதியுள்ளார். ஆனால் அவர் உள்ளம் நினைத்திருக்கும்-பேசியிருக்கும்.

அட்டைப் படத்திற்கு விளக்கம் தரும் கட்டுரை ஒன்றிருந்திருந்தால் தொல்காப்பியத்திற்கே விளக்கம் கிடைத்தது போன்றிருந்திருக்கும்: பண்டைய கூத்தின் இலக்கணம் வெளிப்பட்டிருக்கும்.

இச்சிறு குறைகள்கூட இல்லாமலிருக்க முடியாதுதான். ஆனால் அடுத்த மலரில் இவைகள் களையப்படுமா?

அ. வரதராசன்,
அரிசிப்பாளையம்.

— முன்பக்கத் தொடர்ச்சி —

"வாக்கெடுப்பு நடத்துவதென்றால் தனக்குப் பாதகமாகத்தான் முடியும் என்று இந்தியா உணர்ந்து கொண்டதால்தான், அதற்கு இணங்க மறுக்கிறது" என்று பாகிஸ்தான் நம்முடைய மேனன்களைவிட அபரிமிதமான சாமர்த்தியத்துடன் அழகாகப் பிரசாரம் செய்தது. இந்தப் பிரசாரம், இந்தியா சில ஆதரவாளர்களை இழக்கவும் பாகிஸ்தானுக்குச் சில நண்பர்கள் சேரவும் வாய்ப்பேற்படுத்திக் கொடுத்தது என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

நாலரை ஆண்டுகளுக்குப் பிறகு வெளிவந்த அப்துல்லாவும் வாக்கெடுப்புப் பிரச்னையில் தான் பிரதான கவனம் செலுத்துகிறார் என்று அவருடைய பேச்சுக்கள்மூலம் தெரியவருகிறது.

ஐந்தாவது ஆண்டுகளுக்கு முன் உலகத்தார் எல்லோர்க்கும் நாம்கொடுத்தஉறுதிமொழியைத் தான் இப்போது அப்துல்லா சொல்கிறார். நேருபிரான் வாக்கெடுப்பு வேண்டும்என்றால், "ஆமாம், வேண்டும்" என்றும் அவர் கூடாது என்றால்"நிச்சயம் கூடாது. வாக்கெடுப்பைப் பற்றிப் பேசுபவன் தேசத் துரோகி; பாகிஸ்தானத்தின் கையாள்; அமெரிக்காவின் ஏஜண்ட்" என்றும் இந்தியப் பத்திரிகைகளும், டெல்லி அரசியல் வாதிகளும் பேசி வருவது நேருவுக்கு நல்ல பிள்ளையாய் நடக்க முயற்சி செய்வதில் வெற்றி கிடைக்கலாமே தவிர, நேர்மையானதும் பிறர் மெச்சும்படியானதுமான அரசியலறிவு இந்த நாட்டில் வளர்வதற்கு வழி செய்வதாகாது. நேரு போன்றாரைவிட, இந்தியாவின் அரசியல் பாரம்பர்யம் அதிக நாட்களுக்கு நிலைக்க வேண்டியதாகும்.

எனவே, நிச்சயமான ஓர் முடிவெடுத்துக்கொண்டு செயல்படுவதுதான் காஷ்மீர்ப் பிரச்னை முடித்துக் கட்டக்கூடியதாகும். பக்ஷிகுலாம் முகமதுவின் நன்றி விஸ்வாசத்தையோ, கிருஷ்ண மேனனின் வாசாலகத்தையோ நம்பி, ஏன் கிதையிலிருந்து காட்டவில்லை என்றே பேசிக் கொண்டிருப்பதைக் காட்டிலும், அவரை அணுகிப் பேசி விரைவில் முடிவுக்கு வருவதுதான் புத்திசாலித்தனம்.

அப்துல்லாவைக் குறைத்து மதிப்பிட டெல்லி அரசாங்கம் ஒருபோதும் துணிவது கூடாது. ஏனென்றால், இரு பெரும் அரசுகள் மோதிக்கொண்ட சூழ்நிலையிலும், நீங்கள் இருவருமே காஷ்மீரத்திற்கு உரிமை கொண்டாட உரிமையற்றவர்கள் காஷ்மீர் தனி நாடு என்று சொன்ன நெஞ்சழுத்தக்காரர்.

அத்துடன் அப்துல்லாவைப் பற்றிய கருத்தை வெளியிடும் போது கண்ணியமாகவும்நாணயமாகவும் நடப்பதுதான் நல்லது என்று பொதுவாக டெல்லி ஆட்சியாளரும் குறிப்பாக இந்தியப் பத்திரிகை உலகமும் உணர வேண்டும். இது பிற்காலத்திற்கு நமது நேர்மையை நிலைநாட்டப் பெரிதும் பயன்படும். மேலும், ஒற்றுமையை வலியுறுத்துவோர் அத்தனைபேரும் ஏமாற்றுக்காரர்களாகவும், அசல் கோழைகளாகவும்தான இன்றைய நிலையில் காணப்படுகின்றனர்; சக்தி வாய்ந்த அதிகார பலங்களை எதிர்த்துப் பிரிந்துபோகத் தலைப்பட்டவர்கள் வெற்றிக்கொடி நாட்டுவதுதான், இந்த இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த 'விசேஷ'மாகப் போய்விட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களாகிய நாம், டெல்லியிலிருந்து பிரிந்துத் தனி அரசு காண்பதையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டிருந்தாலும், அப்துல்லாவினுடைய 'தனி காஷ்மீர்' திட்டத்தைப் பற்றி இப்போது ஒன்றும் சொல்வதற்கில்லை. அவர் எந்த அடிப்படையில் நின்று அப்படிப் பேசுகிறார் என்பது தெளிவாகத் தெரியவில்லை என்றாலும், அவருடைய மனத் திண்மைக்காகவும், சரி எனப் பட்டதைத் தைரியமாகச் சொல்லும் பண்பிற்காகவும் அவரைப் பெரிதும் பாராட்டுகிறோம்; வரவேற்கிறோம். ★

மதுரை மாவட்ட தி. மு. க.

மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், செயலாளர் எஸ். முத்து அவர்கள் தலைமையில் 12-1-58 மாலை 4 மணி அளவில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கூடியது; 80-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் வருகை தந்திருந்தனர்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள்நிறைவேறின:

3-வது மாவட்ட மாநாட்டை பழனியில் மார்ச் 8, 9-ந் தேதிகளில் நடத்துவதெனத் தீர்மானிக்கிறது.

மாவட்டக் குழுவையே மூன்றுவது மாநாட்டின் வரவேற்புக் குழுவாக அங்கீகரிக்கிறது.

மூன்றுவது மாவட்ட மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவராக மாவட்டக் கழகச் செயலாளர் **எஸ். முத்து** அவர்களும், செயலாளர்களாக - தோழர்கள் **ஆவடையப்பன், பி. எஸ். சேக்** (பழனி) ஆகிய இருவரும்; தொண்டர் படைத் தலைவர்களாக **கா. வெங்கடாசலம்** (பழனி) **பா. சீனி** (மதுரை) ஆகிய இருவரும்; பொருளாளராக-**எஸ். எஸ். இராசேந்திரன்** அவர்களும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாநாட்டுத் தலைவராக தோழர் **கி. மனோகரன்** அவர்களையும், திறப்பாளராக புரட்சி நடிகர் **எம். ஜி. இராமச்சந்திரன்** அவர்களையும் அழைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்.
PRO: ... 115, திண்டுக்கல்ரோடு, மதுரை

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு